பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 17 புதன்கிழமை (02.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 247

# திருமலைக் கடற்தளம் மீது புலிகள் கடும் ஷெல் மழை!

★ 'டோறா' மூழ்கடிப்பு! 8 படையினர் பலி! ★ 850 துருப்பினருடன் கப்பல் அருந்தப்பு!
★ பதிலுக்கு சம்பூர் பகுதியில் விமானப்படை குண்டுமாரி; அகோர எறிகணை வீச்சு!


புலிகளின் கடும் ஷெல் மழைக்கு இலக்கான திருமலை கடற்படைத்தளம்.

திருகோணமலை, ஓகஸ்ட் 02

திருகோணமலை நகரில் அமைந்துள்ள கடற்படைத் தளத்தின் மீது நேற்றுப் பிற்பகல் அகோர மோட்டார் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. இதனால், கடற்படைத் தளப் பிரதேசம் அதிர்ந்தது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சம்பூர் பிரதேசத்தில் இருந்து மேற்கொள் ளப்பட்டதாகக் கூறப்படும் இத்தாக்குதலினால் கடற்படைத் தளத்தில் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கடற்படை மாலுமிகள் நால்வர் உயிரிழந்திருக்கின்றனர். 32 பேர் வரை காயமடைந்திருக்கின்றனர்.

122 மி.மீ. ரகத்தைச் சேர்ந்த சுமார் 36 மோட்டார் குண்டுகள் கடற்படைத் தளம் மீது பரவலாக விழ்ந்து வெடித்தன என்று கடற்படை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

வடக்கில் இருந்து சுமார் 850 துருப்பினரை ஏற்றிக்கொண்டு வந்த துருப்புக் காவி கப்பல் ஒன்று கப்பல் துறையை நெருங் கிய வேளையே இந்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைத் தளம் மீதான ஷெல் தாக்குதல்: மன்மோகன்சிங்குடன் உரையாடினார் மஹிந்த

கொழும்பு,ஓக.2

திருகோணமலைக் கடற்படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய கடும் ஷெல் தாக்குதல்கள் குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கு டன் நேற்று அவசர அவசரமாக தொலை பேசி மூலம் தொடர்புகொண்டு பேச்சு நடத்தியுள்ளார்.

முன்கூட்டியே நிரற்படுத்தப்படாத வகை யில் அவசர அழைப்பை ஏற்படுத்திக்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, திருகோண மலை கடற்படைத் தளத்தின்மீது விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்கு தல் மற்றும் அதனால் எழுந்துள்ள பாதுகாப்பு நிலைவரம் குறித்து இந்தியப் பிரதமருக்கு எடுத்துக்கூறியதாகவும் - தெரியவந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மஹிந்த ஐ.நாவுக்கு நூறுபேர் கொண்ட பரிவாரங்களுடன்!

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நூறுபேர் கொண்ட பரிவாரங்களுடன் எதிர்வரும் 11 ஆம் திகதி அமெரிக்காவுக்கு விஜயம் மேற் கொள்ளவிருக்கிறார்.

ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறவுள்ள ஐ.நா. பொதுச்சபைக்கூட்டத்தில் கலந்து கொண்டு விசேட உரை ஒன்றை அவர் நிகழ்த்த விருக்கிறார்.

மூன்று வாரங்கள் அமெரிக்காவில் தங்கி யிருக்கும் ஜனாதிபதி உயர்மட்டத் தலைவர் களைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

ஜனாதிபதியுடன் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அடங் கிய நூறு பேர் கொண்ட குழு அமெரிக்கா செல்கிறது. (எ-1)

## படை நகர்வு நேற்று மந்தம் வான் தாக்குதல்கள் தீவிரம்!

### அணைக்கட்டுப் பகுதியை இராணுவம் நெருங்கிவிட்டது என்கிறார் பேச்சாளர்

கொழும்பு, ஓக.2

திருகோணமலை மாவட்டம் மாவிலாறு எல்லைப் பிரதேசத்தில் அரசுப் படைகளுக் கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் ஆரம்பித்த கடுஞ்சமர் நேற்று சற்றுத் தணிந்தது. எனினும், அந்தப் பிரதேசத் தில் அரசுப் படைகளின் வான் தாக்குதல்க ளும், ஷெல் வீச்சுக்களும் தீவிரமாகக் காணப் பட்டன என்று போர் முனைத் தகவல்கள் தெரி வித்தன.

உக்கிரமான வான், தரை வழித் தாக்குதல் களோடு மூன்று முனைகளினூடு அரசுப் படை கள் முன்னெடுத்த நகர்வு முயற்சியை - ஒரு அடி தூரம் கூட முன்னேற விடாது - தாங்கள் தடுத்து நிறுத்தி விட்டனர் என்று புலிகள் தரப் பில் தெரிவிக்கப்படுகிறது.

மாவிலாறு பிரதேசத்தில் சர்ச்சைக்குரிய கால்வாய் அணைக்கட்டுப் பகுதியைப் படை கள் எட்டி விட்டன என்று இராணுவத்தின் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

தமது படைகள் அணைக்கட்டுப் பகுதியை நெருங்கி விட்டன என்று இராணுவப் பேச்சா ளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நேற்றுப் பகல் கொழும்பில் தெரிவித்தார்.

"மாவிலாறு கால்வாயைத் திறப்பதற்கான இராணுவ நடவடிக்கையில் இரு அதிகாரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## கதிரிப்பாயில் நேற்று நண்பகல் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை!

அச்சுவேலி, ஓக.2

அச்சுவேலி கதிரிப்பாய் சந்தியிலிருந்து வளலாய் நோக்கிச் செல்லும் முரசொலி வீதி யில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பொலீஸ் கான்ஸ்டபிள் சுட்டுக்கொலை

வவுனியா, ஓக.2

வவுனியா ஹொரவப்பொத்தானை வீதி யில் 2ஆம் கட்டையில் நேற்று மாலை 6.45 மணியளவில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மடுகந்த பகுதியிலிருந்து சைக்கிளில் வவு னியா நகர் நோக்கி வந்த வேளையிலேயே இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். மோட் டார் சைக்கிளில் வந்தவர்கள் இவர் மீது துப் பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச்சென்று விட்டனர் எனக் கூறப்பட்டது. (எ-164)

## கண்காணிப்புக் குழுவிலிருந்து சுவீடனும் வெளியேறும்!

கொழும்பு, ஓக.2

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இருந்து சுவீடனும் வெளியேறும் என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் அன்றஸ் ஒல்ஜிலென்ட் தெரி வித்தார்.

விடுதலைப்புலிகளின் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் தடைசெய்ததை அடுத்து கண்காணிப்புக்குழுவில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய நாடுகளின் கண்காணிப்பாளர்க ளின் பணிநடுநிலைமையாக இருக்காது என் றும்- எனவே அவர்கள் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் வெளியேறிவிடவேண்டும் என்றும்- விடுதலைப் புலிகள் கோரியிருந்த னர்.

இதன்படி டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகள் தமது நாட்டுக் கண்காணிப்பாளர்க ளின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு அவர்களைத் திருப்பி அழைப்பது என்று ஏற் கனவே முடிவு செய்திருந்தன.

தற்சமயம், சுவீடனும் கண்காணிப்புக் குழு விலிருந்து வெளியேற முடிவு செய்துள்ளது.

## ஆயுதக்களஞ்சிய வெடிப்பால் அதிரடிப்படைக்குப் பேரிழப்பு!

கொழும்பு, ஓகஸ்ட் 02

களுத்துறை கட்டுக்குருந்த சிறப்பு அதிரடிப்படை முகாமில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஆயுதக்களஞ்சியம் வெடித்ததால் பெருந்தொகையான ஆயுதங்கள் வெடித்துச் சிதறி எரிந்து நாசமடைந்திருக்கின்றன என்றும் - இதனால் படைத்தரப்புக்கு பெரும் இழப்பு ஏற்பட்டிருப் பதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

நேற்று முன்தினம் நள்ளிரவு 11.30 மணியளவில் பாரிய வெடிச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து, தொடர்ச்சியாக சுமார் ஒரு மணிநேரம் குண்டுகள் வெடித்த சத்தங்கள் கேட்டன என்று அப்பிரதேசத்தை அண்டிய பகுதிகளிலுள்ள கிராமவாசிகளை மேற்கோள் காட்டி இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டன.

இந்தச் சம்பவத்தால் உயிர்ச்சேதங்கள் எவையும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட் [illegible] ஞ்சியப்படுத்தப்பட்டிருந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆற்று அணையைத் திறப்பதற்கான இராணுவ நடவடிக்கை யுத்தம் அல்ல!

## போர் நிறுத்தத்தை அரசு இன்னும் மதிக்கிறது என்கிறார் ரம்புக்வெல



கொழும்பு, ஒக.02

மாவிலாறு கால்வாயைத் திறப்பதற்கான நடவடிக்கையையே படையினர் மேற்கொள்கின்றனர். இது யுத்தமல்ல.

பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான செய்தியாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீறப்பட்டுவிட்டது. இப்போது அரசு அதைக் கடைப்பிடிப்பதை விட்டு யுத்தத்தை ஆரம்பித்துவிட்டதென புலிகளின் திருமலை மாவட்டப் பொறுப்பாளர் எழிலன் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டுள்ளார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கைவிடுவதென்றால் அதற்கு ஒரு வழிமுறை இருக்கின்றது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கைவிடும் தரப்பு இவ்விடயத்தை 14 நாட்களுக்கு முன்னர் நோர்வே வெளிவிவகார அமைச்சு மூலமாக மறு தரப்புக்கு முறைப்படி அறிவிக்க வேண்டும். அரசு அதைச் செய்யவில்லை. எனவே, அரசு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறவில்லை. மதித்துச் செயற்படுகின்றது.

தண்ணீர் தொடர்பான மனிதாபிமான அடிப்படையிலேயே நாம் மாவிலாறு கால்வாயைத் திறந்து விடும்படி கோரினோம். பேச்சு நடத்தினோம். தண்ணீர் தொடர்பாக எதுவித நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

மாவிலாறு கால்வாயைத் திறந்து விடும் இராணுவ நடவடிக்கை இப்போது இடம்பெறுகிறது. இதை யுத்த நிறுத்த மீறல் என்றோ, யுத்தம் ஆரம்பித்து விட்டதென்றோ கருத முடியாது." - இவ்வாறு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். (ஐ)

# 'வணிகநாதம்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக.2

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி கலை வர்த்தக மாணவர் மன்றத்தின் 'வணிக நாதம்' மலர் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் கல்லூரியின் பி.எஸ்.மண்டபத்தில் மன்றத் தலைவர் இ.ருசந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மலரின் வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக வணிகத்துறைப் பீடாதிபதி க.தேவராஜாவும், மதிப்பீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரனும் நிகழ்த்தவுள்ளனர். (13)

# உலமாக்களும், ஜே.வி.பியினரும் அமெ. தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்!

## லெபனான் மீதான போரைக் கண்டித்துக் கோஷம்

கொழும்பு, ஒக.2

லெபனான் மற்றும் பலஸ்தீனம் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களைக் கண்டித்து ஜே.வி.பியும், உலமாக்களின் முஸ்லிம் கட்சியும் இணைந்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்பாக நேற்றுக் முற்பகல் 10 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உலமாக் கட்சியின் தலைவர் மௌலவி முபாறக், பிரதித் தலைவர் மௌலவி அஸ்வர், உலமாக் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இதில் கலந்துகொண்டு இஸ்ரேலுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர்.

இவ்வார்ப்பாட்டம் பற்றி உலமாக் கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத் கூறுகையில்,

"அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடியான இஸ்ரேல் மேற்கொண்டு வரும் மிலேச்சத்தனமான, வெறித்தனமான தாக்குதல்களை இதயத்தில் ஈரமுள்ள எந்தவொரு மனிதனாலும் சகித்துக் கொண்டிருக்க முடியாது - எனத் தெரிவித்தார். (ஐ)

# திருமலை கிளைமோரில் காயமுற்ற மற்றொரு சிப்பாய் நேற்று மரணம்

திருகோணமலை சேருநுவரவில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் காயமடைந்த இரு படையினரில் ஒருவர் நேற்று உயிரிழந்தார். இவருடன் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த படையினரின் எண்ணிக்கை 19 ஆக அதிகரித்தது. சேருநுவர - கந்தளாய் வீதியில் சென்றுகொண்டிருந்த இராணுவ பஸ்மீதே நேற்று முன்தினம் இரவு 10.45 மணியளவில் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தத் தாக்குதலின் போது குறித்த பஸ்ஸில் பயணித்தவர்களில் 18 படையினர் அந்த இடத்திலேயே பலியாகினர். இருவர் காயமடைந்திருந்தனர். இவர்களில் ஒருவர் கந்தளாய் மருத்துவ மனையில் உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற கந்தளாய் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் படையினர் நேற்று முழுவதும் பாரிய தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். எனினும், அங்கு எவரும் கைது செய்யப்பட்டனர் என்று தகவல் இல்லை. (த)

# கத்தோலிக்க ஆயர் பேரவையின் அமர்வு யாழ். ஆயர் இல்லத்தில் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.2

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் அமர்வு நேற்றுக்காலை யாழ். ஆயர் இல்லத்தில் ஆரம்பமானது. இந்த அமர்வு மூன்று தினங்கள் நடைபெறும்.

பேரவையின் தலைவரும் கண்டி ஆயருமான மேதகு வியானி பெர்னாண்டோவின் தலைமையுரையுடன் நேற்றுக்காலை 9மணியளவில் அமர்வு ஆரம்பமாகியது.

இளைப்பாறிய ஆயர்கள் தவிர்ந்த ஏனைய ஆயர்கள் இந்த அமர்வில் கலந்து கொண்டனர்.

இந்த அமர்வில் பாப்பரசரின் பிரதிநிதி பேராயர் மேதகு மரியோ கொற்றியும் பங்கேற்றார்.

இந்த அமர்வில் யாழ். நிலைமை நாட்டு நிலைவரம், மறைமாவட்ட நிலைமை ஆகியன குறித்து ஆராயப்பட்டது.

வருடத்தில் 4 தடவைகள் இந்த அமர்வு இடம் பெறுவது வழமை. மூன்று அமர்வுகள் கொழும்பிலும், மற்றைய அமர்வு கண்டியிலும் இடம்பெறும்.

வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பு தவிர்ந்த மறை மாவட்டம் ஒன்றில் இந்த அமர்வு தற்போது நடைபெறுகின்றது.

யாழ். ஆயரின் வெள்ளி விழா என்பதால், விதிவிலக்காக இந்த அமர்வு தற்போது யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (1)




கத்தோலிக்க ஆயர் பேரவையின் முதலாம்நாள் அமர்வின்போது....

# உருத்திரபுரம் கொலைச் சம்பவம்: குற்றவாளிக்கு மரண தண்டனை

கிளிநொச்சி, ஒக.2

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலைச் சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மரண தண்டனைத் தீர்ப்பை கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதியாளர் செல்வி மங்களேஸ் வழங்கியுள்ளார்.

உருத்திரபுரத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை நாகராசா என்பவருக்கு எதிராக, யாழ்ப்பாணம் அல்வாய் தெற்கைச் சேர்ந்த நடராசா யோகேஸ்வரன் என்பவரை 2004.07.26ஆம் திகதி கூரிய ஆயுதமான கத்தியால் குத்திக் கொலைசெய்தார் எனக் குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதியாளர் செல்வி. மங்களேஸ் மரணதண்டனைத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

கொலைதொடர்பாக சான்றுகள், சான்றுரைஞர்கள் ஊடாக இறந்தவரைக் குற்றவாளி வேண்டுமென்றே திட்டமிட்டுக் கத்தியால் குத்தி ஆள் கொலை புரிந்தார் என்பது நிரூபிக்கப்பட்டதால் அதியுயர் தண்டனையாக இந்தத் தண்டனை விதிக்கப்படுகிறது என்று நீதியாளர் தெரிவித்தார். (1)

# புலமைப்பரிசில் மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக.2

கோப்பாய் கோட்டத்தில் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடிப் பரீட்சை இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

கோப்பாய் கோட்ட கல்வி அபிவிருத்திப் பிரிவினரின் வழிகாட்டலிலும், அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையினது அனுசரணையுடன் இப்பரீட்சை நடத்தப்படுகின்றது. (1)

# நாட்டில் பெரும் போர் மூளும் ஆபத்து! மோதலை நிறுத்தி பேச்சு நடத்துங்கள்!!

## அரசு, புலிகள் இருதரப்புக்கும் ஐ.தே.கட்சி வேண்டுகோள்

கொழும்பு, ஒக.2

மாவிலாறு தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரச படையினருக்குமிடையில் இடம் பெற்றுவருகின்ற நேரடி மோதல் மீண்டுமொரு யுத்தம் உருவாகும் அபாயகரமான நிலையைத் தோற்றுவித்துள்ளது.

இந்த நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு மோதல் நடவடிக்கையை உடனடியாக நிறுத்திப் பேச்சுமூலம் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழியைத் தேடுமாறு இருதரப்பினருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க நேற்றுக் கொழும்பில் உள்ள எதிர்க் கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அழைப்பு விடுத்தார்.

அவர் அப்போது கூறியதாவது:-

யுத்தநிறுத்த ஒப்பந்தம் படிப்படியாக மீறப்பட நாடு யுத்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எவற்றையும் அரசு மேற்கொள்ளாது வெறுமனே அமைதிப் பேச்சுக்கான முயற்சியில் நாம் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம் எனக் கூறிவருகின்றது.

யுத்தத்தை மெதுமெதுவாகத் தொடங்கி இப்போது மாவிலாறு விடயத்தில் அதை உச்சத்திற்குக் கொண்டுபோய்விட்டது அரசு. பகிரங்கமாகவே யுத்தம் வெடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

மாவிலாற்றைப் புலிகள் தடைசெய்தமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசு வேறு ஒரு முறையைக் கையாண்டு இந்தப் பிரச்சினையைத் தீர்த்திருக்கலாம். அதை விட்டுவிட்டு மோதலைத் தொடங்கியதானது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதல்ல.

நாட்டுமக்கள் இப்போது மிகவும் அச்சத்துடன் உள்ளனர். நாடு தழுவிய யுத்தம் ஒன்று ஏற்பட்டுவிடுமோ என மக்கள் அஞ்சுகின்றனர்.

வடக்கு - கிழக்கில் உள்ள மக்கள் மாத்திரமன்றி நாடு முழுவதும் உள்ள அனைத்தின மக்களும் பாதிப்புக்குள்ளாகும் நிலை தோன்றியுள்ளது.

நாட்டில் நிரந்தர சமாதானத்தை உருவாக்குவோம்; வாழ்க்கைச் செலவீனத்தைக் குறைப்போம் என வாக்குறுதிகளை வழங்கி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகிய மஹிந்த ராஜபக்ஷ அந்த இரண்டு வாக்குறுதிகளையும் மீறிவிட்டார்.

ஜனாதிபதி உடனடியாக நாட்டில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற யுத்தம் போன்ற இந்த நிலையை உடனடியாக இல்லாதொழித்து ஒரு சமாதான சூழலைக் கட்டியெழுப்ப முயல வேண்டும். - என்றார். (ஐ)

# புதுமுக மாணவருக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட புதுமுக மாணவர்களுக்கு எயிட்ஸ் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று முற்பகல் 11 மணியளவில் மருத்துவபீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்தக்கருத்தரங்கு நடைபெற்றது. இதில் டாக்டர் எஸ்.சாயி நிரஞ்சன் எயிட்ஸ் தொடர்பான கருத்துரைகளை வழங்கினார். (எ-13)

# பெற்றோல், டீசல் விலைகள் உயர்வு

கொழும்பு, ஒக. 2

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றோல், டீசல் என்பவற்றின் விலைகளை நேற்றுமுதல் மூன்று ரூபாவால் அதிகரித்தது.

இதன்படி தற்போது பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் ஒரு லீற்றர் 93 ரூபாவாக விற்பனை செய்யப்படும் பெற்றோல் 96 ரூபாவாகவும், ஒரு லீற்றர் 61 ரூபாவாக விற்கப்படும் டீசல் 64 ரூபாவாகவும் விலைகள் அதிகரிக்கும்.

இதேவேளை - இந்தியன் ஓயில் கோப்பரேசன்(ஐ. ஓ .சி.) இலங்கையில் தனதுவிநியோக நிர்வகிப்பின் கீழுள்ள எரிபொருள் நிலையங்களில் பெற்றோல், டீசல் என்பவற்றின் விலைகளை நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் 5 ரூபாவால் அதிகரித்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கிடையில்-இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பின் பிரகாரம் நேற்றுமுதல் யாழ். குடாநாட்டில் பெற்றோல், டீசல் என்பவற்றின் விலை தற்போதைய விற்பனை விலையிலிருந்து 3 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் -

இந்தியன் ஓயில் கோப்பரேசன் (ஐ.ஓ.சி.) எரிபொருள் விலை அதிகரிப்பு யாழ் குடாநாட்டுக்குப் பொருந்தாது என்றும் - யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## மேலாதிக்கச் செருக்கோடு மேற்கொள்ளப்படும் செயற்பாடு

திருகோணமலை மாவட்டம் மாவிலாறு எல்லைப் புறப் பிரதேசத்தில் இலங்கை அரசுப்படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்றுவரும் தற்போதைய மோதல்கள் முழு அளவிலான யுத்தமாக விரிவடையாது எனத் தாம் நம்புகின்றார் என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸன் தெரிவித்திருக்கின்றார்

யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருக்க - கண்காணிப்பாளர்கள் பார்த்திருக்க - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றும் முனைப்புடன் மும்முனை நகர்வுக்கான பெரும் இராணுவ நடவடிக்கையை விரிவான ஏற்பாடுகளோடு அரசுப் படைகள் முன்னெடுக்கின்றன. விடாது வான் வழித் தாக்குதல்கள் நடக்கின்றன. விமானக் குண்டு வீச்சுகளால் அப்பகுதி அதிர்கின்றது. ஷெல், பீரங்கிகள் முழங்கிக் கொண்டிருக்கின்றன.

யுத்த நிறுத்தத்தை மீறி மிகப் பெரும் இராணுவ நகர்வு ஒன்றைப் - பகிரங்கமாக - இலங்கை அரசு, புலிகளின் பிரதேசத்துக்குள் முன்னெடுக்கின்றது.

அதை வன்மையாகக் கண்டித்து, முழு யுத்தநிறுத்த மீறல் என்பதைப் பகிரங்கப்படுத்தி, இலங்கை அரசின் இராணுவ முனைப்பை சர்வதேசத்துக்கும் அம்பலப்படுத்த வேண்டிய கண்காணிப்புக் குழுத் தலைவர், இந்த இராணுவ நடவடிக்கை பெரும் யுத்தமாக விரிவடையாது எனத் தாம் நம்புகின்றார் என்று தமக்குத் தாமே கூறித் திருப்திப்பட்டுக் கொள்கின்றார்.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சிலர் மத்தியில் உரையாடிய கண்காணிப்புக் குழுத் தலைவர், மாவிலாறு யுத்தத்துக்கு தண்ணீர்ப் பிரச்சினை மூல காரணமல்ல, அதன் பின்புலத்தில் வேறு நோக்கங்கள், திட்டங்கள் இருக்கின்றன என்றும் கூறியிருக்கின்றார். ஆனால், அந்த நோக்கங்கள், திட்டங்கள் எவையாக இருக்கும் என்பதனை அவர் கோடி காட்டவில்லை.

இந்த மோதல் முழு யுத்தமாக விரிவடையும் வாய்ப்புக் குறைவு என்று கூறுவதன் மூலம், கண்காணிப்புக் குழுத் தலைவர் அசாத்திய நம்பிக்கை ஒன்றை ஏற்படுத்த முயன்றாலும் யதார்த்தம் அதுவல்ல என்பதுதான் உண்மை.

யுத்தநிறுத்தத்தைக் கண்காணிக்கும் ஐந்து நாட்டுப் பிரதிநிதிகளில் சுவீடன், டென்மார்க், பின்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளின் பணி இந்த மாத இறுதியோடு முடிவுக்கு வரவேண்டிய நிலைமை உறுதியாகிவிட்டது. சுவீடன் நாட்டவரான தற்போதைய யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரே மாத இறுதியுடன் மூடை, முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு பணியிலிருந்து வெளியேறுவது இப்போதே பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

அப்படி இம்மாத இறுதியில் மூன்று நாடுகளைச் சேர்ந்த கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் இங்கிருந்து வெளியேற தற்போதைய கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை சுமார் அறுபதிலிருந்து இருபதாகக் குறைந்துவிடும். அது இப்போதைக்குத் தவிர்க்க முடியாதது.

தாராளமாகக் கண்காணிப்பாளர்கள் பணியில் இருக்கவே - பார்த்திருக்கவே - யுத்தநிறுத்த உடன்பாட்டுக்கு முரணான வகையில் - ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறும் முறையில் - பெரும் இராணுவப் படையெடுப்பு நகர்வை அரசுத் துருப்புகள் ஆரம்பித்திருக்கின்றன. அப்படியிருக்கையில், யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை சுமார் மூன்றில் ஒன்றாகக் குறையும்போது நிலைமை எவ்வாறு அமையும் என்று கற்பனை பண்ணிப் பார்ப்பது அப்படி ஒன்றும் கஷ்டமானதல்ல.

மோசமடைந்து வரும் இலங்கை நிலைவரம் குறித்தும், மாவிலாறு நோக்கி இலங்கை அரசு ஆரம்பித்துள்ள படை நடவடிக்கைகளின் பெறுபேறு மற்றும் போக்குக் குறித்தும் சர்வதேச சமூகம் அதிக கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கின்றது என்றும் அறிய வருகின்றது.

பல்வேறு மேற்குலக நாடுகள் இது விடயத்தில் இலங்கை அரசின் பொறுப்பற்ற போக்குக் குறித்துத் தமது இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் இலங்கை அரசுத் தலைமைக்குத் தமது அதிருப்தியைத் தெரியப்படுத்தியிருக்கின்றன என்றும் தெரிகின்றது.

மாவிலாறு இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னான நிலைவரம் குறித்து இந்திய அரசுத் தலைமையின் பிரதிநிதிகள் நேற்று புதுடில்லியில் கூடி ஆராயவிருந்தனர்.

இராணுவ முனைப்போடு விடயங்களைக் கையாள முயலும் இலங்கை அரசுத் தலைமை, தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவ அடக்குமுறை வாயிலான தீர்வைத் திணிப்பதையே தனது உள்ளார்ந்த திட்டமாகக் கொண்டிருக்கின்றது. மாவிலாறில் புலிகளுக்கு எதிராக வலிந்து தாக்குதல் ஒன்றை நடத்தும் அரசின் உள்நோக்கம் அதையே வெளிப்படுத்துகின்றது; தெளிவுபடுத்துகின்றது.

இத்தகைய இலக்கும், நாசகாரத் திட்டமும் கொண்டு இலங்கை அரசுத் தரப்பு இயங்கும்போது, மாவிலாறுச் சமர் முழு யுத்தமாக வெடிக்க வாய்ப்பில்லை என்று யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் கூறுவதை நம்பியிருக்க முடியாது.

அவர் கூறுவது போல, தண்ணீர் பெறுவதை உறுதிப்படுத்துவதற்கான சண்டை அல்ல இது. தனது மேலாதிக்கத்தைத் தமிழர் தரப்புக்கு உறைப்பாய் உணர்த்தும் எண்ணத்தோடு தென்னிலங்கையின் புதிய அரசுத் தலைமை தீட்டிய திட்டத்தின் ஓர் அங்கமே இந்த நடவடிக்கை என்றே இதைக் கருத வேண்டியுள்ளது.

மாவிலாறு தண்ணீப் பிரச்சினையை மட்டுமல்ல, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையையும் கூடத் தீர்ப்பதில் இதே போக்கைத்தான் - செல்நெறியைத்தான் - காலங்காலமாகக் கைக்கொண்டு வருகின்றன தென்னிலங்கை அரசுகள். சுமுகமாகப் பேசித் தீர்க்க வேண் டிய விவகாரங்களைத் தமது அதிகார மமதையில், செருக்கோடு கையாண்டு, பலவந்தத்தைப் பிரயோகித்து, முழு நாட்டையுமே குட்டிச் சுவராக்கிய சிங்கள அரசுகளுக்கு எந்த வகையிலும் தான் சளைத்தது அல்ல என்பதை இந்த அரசும் இந்தச் செயற்பாடுகள் மூலம் நிரூபிக்கின்றது.

## கைதடிப் பிரதேசத்தில் மீண்டும் சட்டவிரோதமாக மணல் அகழ்வு

கைதடி, ஓக.2

கைதடிப் பிரதேசத்தில் மீண்டும் சட்ட விரோதமாக மணல் அகழும் நடவடிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கைதடி ,வேலம்பிராய், தச்சன்தோப்பு, கோயிலாக்கண்டி போன்ற பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு நடைபெற்று வந்தது. இப்பகுதி மக்களின் எதிர்ப்பாலும் நாட்டுநலன் பேணுவோரின் எச்சரிக்கையாலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

ஆனால், தற்போது மீண்டும் மணல் அகழ்வு தீவிரமாக இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.

பகல் மற்றும் இரவு வேளைகளில் உழவு இயந்திரங்களுடன் இப் பகுதிக்கு வருவோர் தடுக்க முயற்சிப் போரை அச்சுறுத்தி, கொலைப் பயமுறுத்தல்கள் விடுத்து மணலை அகழ்ந்து உழவு இயந்திரங்களில் எடுத்துச் செல்கின்றனர் என்று கூறப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இவ்வாறு மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரம் ஒன்று இலங்கை நீதித்துறையில் உயர் பதவி வகிக்கும் ஒருவரால் கைதடிப் பாலத்துக்கு அண்மையில் பிடிக்கப்பட்டு சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மணல் கொள்ளையைத் தடுக்க உரிய அதிகாரிகள் கவனமெடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (204-75)

## நிதியை முடக்கும் அதிகாரிகளிடம் விளக்கம் கோருவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஓக.2

நன்கொடை வேலைத்திட்டங்களுக்கான கட்டுநிதியை முடக்கி வைக்கும் அதிகாரிகளிடம் விளக்கம் கோரப்படும்.

வடக்கு- கிழக்கு உள்ளூராட்சிப் பணிப்பாளர் சகல உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களுக்கும் விடுத்துள்ள அறிவிப்பிலேயே மேற்கண்ட எச்சரிக்கை குறிப்பிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கில் மாகாண நன்கொடை வேலைத்திட்டம் தொடர்பான வேலைகளுக்கான கட்டுநிதி கட்டங் கட்டமாக மாகாணத் திறைசேரியால் விரைவில் வழங்கப்படும்.

நன்கொடை வேலைகளுக்கான இந்தக் கட்டுநிதி பிராந்திய அளவுகளுக்கும், முன்னைய பெறுபேறுகளுக்கும் ஏற்பவே வழங்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டங்களை உரிய வேளையில் ஆரம்பித்து நிறைவேற்றினாலேயே உரிய கட்டு நிதி மாகாணத் திறைசேரியிடம் பெற்று வழங்கப்படும்.

இந்த நிதியை அரசு கடன் அடிப்படையில் பெற்று வழங்குகின்றது. ஆகவே பணத்தை முன்னேற்றமின்றி திணைக்கள வங்கிக் கணக்கில் முடக்கி வைக்கும் அதிகாரிகள் விளக்கம் அளிக்க வேண்டி நேரிடும். வேலை தொடர்பான முன்னேற்ற அறிக்கையை உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் குறிப்புரைகளுடன் தெரியப்படுத்த வேண்டும்.

- இவ்வாறு பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (95)

## தென்மராட்சி பண்ணையாளருக்கு

தென்மராட்சி, ஓக.2

தென்மராட்சி பிரதேசத்தில் மாடு, ஆடு, கோழி போன்றவற்றை வளர்க்கும் பண்ணையாளர்களிடையே சிறந்த பண்ணையாளரைத் தெரிவு செய்வதற்கான போட்டி விரைவில் நடத்தப்படவுள்ளது.

இப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் பண்ணையாளர்கள் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கால்நடை வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (117)

## கருத்தரங்கு

வலி.தென்மேற்கு,2

மானிப்பாய் சுகாதார அதிகாரி பிரிவில் எய்ட்ஸ் நோய் தடுப்பு விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இப்பிரிவிலுள்ள பாடசாலைகள், அரச திணைக்களங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்களில் அந்தந்தப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டுவருவதாக மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (135)

## ஓய்வூதியர்களுக்கும் ஜூன் முதல் வாழ்க்கைச் செலவுப்படி உயர்வு

கொழும்பு, ஓக.2

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பாக ஆயிரத்து 100 ரூபாவை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இந்த வாழ்க்கைச் செலவுப்படி அதிகரிப்பை கடந்த ஜூன் மாதத்திலிருந்து வழங்க முடிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுக்கமைய அரச ஊழியர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுப் படிக்கு மேலதிகமாக ஆயிரத்து 100 ரூபாவை வழங்குவதென அண்மையில் அமைச்சரவை முடிவு மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (205)

## மூக்குக் கண்ணாடி கொடுப்பதில் தகராறு; பிரதமரின் மகன் தாக்கி ஒருவர் காயம்!

கொழும்பு, ஓக.2

புளத்சிங்கள தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவமொன்றில் கலந்து கொண்ட பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் மகன் விதுர விக்கிரமநாயக்க, நிகழ்ச்சி அமைப்பாளரொருவரைத் தாக்கிக் காயப்படுத்தினார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 21ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தம்மால் சிபார்சு செய்யப்பட்ட சிலருக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கப்படாமையால் கோபமடைந்தே விதுர விக்கிரமநாயக்கா அந்த நிகழ்ச்சியின் அமைப்பாளர்களுள் ஒருவரை தாக்கினார் என்று தெரிய வருகின்றது.

சம்பந்தப்பட்ட அமைப்பாளர் தமக்கேற்பட்ட காயங்களுக்கு வைத்திய சிகிச்சை பெற்றுக்கொண்ட போதிலும், விதுர விக்கிரம நாயக்காவுக்குள்ள அரசியல் செல்வாக்கு காரணமாக பொலிஸில் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்வதைத் தவிர்த்துக்கொண்டார் என்று காயமுற்றவர் தரப்பினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹொரணைத் தொகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளரான தன்னால் சிபார்சு செய்யப்பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்காமை காரணமாக தமக்கேற்பட்ட கோபம் காரணமாக ஏற்பட்ட கைகலப்பே அதுவெனவும் அது தாக்குதலெனக் கருதத்தக்கதொன்றல்ல எனவும் இது குறித்து விதுர விக்கிரம நாயக்கா கருத்துத் தெரிவித்துள்ளார். (205)

## மறவன்புலோவில் கால்நடைகளுக்கு மருத்துவ சேவை

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலக ஏற்பாட்டில் தென்மராட்சி தெற்கு மறவன்புலோப் பகுதியில் நடமாடும் மருத்துவ சேவை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ளது.

தென்மராட்சி தெற்குப் பிரதே மக்கள் இந்த நடமாடும் மருத்துவ சேவையில் கால்நடைகள் தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்து தீர்வு காணலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வரணிப் பகுதியில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் எதிர்ப்புத் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருவதாகவும் -

மாடுகள் வளர்ப்போர் கால்நடை மருத்துவர் அலுவலகத்தில் பதிவு செய்து மாடுகளுக்கு தடுப்பூசி ஏற்றிக்கொள்ளலாமெனவும் -

அறிவிக்கப்பட்டுள்ளது. (117)

## பிரான்பற்று உப தபாலகத்தை மீள இயக்க முயற்சி

வலி.தென்மேற்கு, ஓக.2

1987ஆம் ஆண்டுமுதல் இயங்காமலிருந்துவரும் பிரான்பற்று உப தபால் அலுவலகத்தை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கம் இந்த தபால் அலுவலகத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜிடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. (86-190)

## அம்புலன்ஸ் படகுச் சேவையை சீராக்க அனலைதீவுப் பகுதி மக்கள் கோரிக்கை

குருநகர், ஓக.2

அனலைதீவிலிருந்து நோயாளரை எடுத்துச் செல்வதற்கான அம்புலன்ஸ் படகுச் சேவையை சீராக்குமாறு அப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நயினாதீவு மற்றும் அனலைதீவிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படும் அவரச நோயாளரை ஊர்காவற்றுறை இறங்கு துறைக்கு எடுத்துச் செல்லவென அம்புலன்ஸ் படகொன்று உள்ளது. இப் படகு இரவு வேளைகளில் நயினாதீவு துறங்கு துறையில் தரித்து நிற்பது வழமையாகும். நயினாதீவு சுற்றயல் கூறு மருத்துவமனையின் கட்டுப்பாட்டில் இப்படகு உள்ளது.

அனலை தீவிலுள்ள சுற்றயல் கூறு மருத்துவமனையிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்படும் அவசர நோயாளரை எடுத்துச்செல்ல நயினாதீவிலிருந்து அம்புலன்ஸ் படகை அழைக்க வேண்டியுள்ளது.

இதில் பலவேளைகளில் தடங்கல் ஏற்படுவதாக அனலைதீவுப் பொதுமக்கள் கூறுகின்றனர். குறிப்பாக இரவு நேரங்களில் நயினாதீவிலிருந்து அம்புலன்ஸ் படகை அனலைதீவுக்கு வரவழைப்பதில் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனால் அவசர நோயாளரை மறுகரைக்கு எடுத்துச்செல்ல கடற்படையின் உதவியை நாடவேண்டியிருப்பதாகவும் -

நயினாதீவில் தரிக்கும் அம்புலன்ஸ் படகை தேவைக்கு அனலைதீவு சுற்றயல் கூறு மருத்துவமனை பயன்படுத்த தக்க வழிவகைகளை ஏற்படுத்துமாறும்-

அனலைதீவு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (51)

### நாளை

ஆடி 18
வியாழக்கிழமை
03.08.2006
திதி : நவமி
முன்னிரவு : 11.54
நட்சத்திரம் : விசாகம்
முன்னிரவு : 08.48
சுபநேரம் : 07.34 - 09.04
இராகுகாலம் : 01.34 - 03.04

### உதயவாக்கு

வாசித்தல் முழுமனிதனாக்குகிறது. கூடி உரையாடல் தயார் நிலையைத் தருகிறது. எழுதுதல் சரியான மனிதன் ஆக்குகிறது. - பேக்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

3மாதங்கள் நிரம்பிய பொமேரியன் நாய்க் குட்டிகள் (சோடியாக - வெள்ளை நிறம்) விற்பனைக்குண்டு. தொடர்பு: 0773609011 (52836)

## காணி விற்பனைக்கு

குசவன்புலம், கோப்பாய் தெற்கு, கோப்பாயில் 6 பரப்பும் 7 குளி காணி விற்பனைக்குண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் ஏற்ற சுற்றாடலில் அமைந்துள்ளது. குழாய்க் கிணற்றுடன் கூடியது. (கோப்பாய் காவல் நிலையத்திற்கு அண்மையாக இராச வீதியில் அமைந்துள்ளது) தொடர்பு: சி.லோகாம்பிகை, இல.06, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். **T.P.:** 3944, 0773024487 (52825)

யாழ்.மாநகர சபைக்கு உள் ஆடியபாதம் வீதியில் செங்குந்தா சந்தைக்கும் நாயன்மார் கட்டுச் சந்திக்கும் இடைப்பட்ட தூரத்திற்குள் அமைந்துள்ள 5 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு: 021 222 9184 (52855)

## தவறவிடப்பட்டுள்ளது

No.8, 3ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர் என்னும் முகவரியைச் சேர்ந்த த.வசந்தாதேவி (597363800V), மு.சகுந்தலாதேவி (665954358V) ஆகிய இருவரது தேசிய அடையாள அட்டைகளும் யாழ். நகருக்கும் தெல்லிப்பழைக்குமிடையில் தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். (52857)

யேசுதாசன் றொபின்சன் சாள்ஸ் என்பவரது தே.அ.அட்டை (800264073V), விசேட அ.அட்டை என்பன யாழ்.நகருக்கும் நல்லூருக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் வராகி கூல்பார், **No.** 15, மத்திய பஸ் நிலையம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். **T.P.:** 0777 6204783 (52861)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள் 05.08.2006 சனிக்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை, நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டிபாம் - வட்டுக்கோட்டை, உடுவில், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி/50607)

## கார் விற்பனைக்கு

**NISSAN SUNNY SUPER SHALOON 64 - 2XXX DIESEL FULL AC WITH CD PLAYER P.S WITH ALOY WHEELS** விற்பனைக்குண்டு. தொடர்பு: **S.L.S** பிரசாத், ஆனந்தபுரம், கிளிநொச்சி. (சி/50608)

# தென்மராட்சி வலய அதிபர்களுக்கு

தென்மராட்சி,ஓக.2

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு அடுத்த வருடத்திற்கான இலவச பாடநூல்கள் வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலயப் பாடசாலை அதிபர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் என்று கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் தெரிவித்தார். (117)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## DIPLOMA IN PHYSICAL EDUCATION ACADEMIC YEAR - 2005/2006

Applications are invited from those who wish to follow the Diploma in Physical Education course to be conducted by the University of Jaffna in the Academic Year 2005/2006

Applicants should satisfy the requirements given below:

**Minimum Educational Qualifications:**

1. Should have passed in three subjects in the G.C.E. (A/L) in one and the same sitting.
2. Should have the minimum qualification required by the University Grants Commission for University admission in Sri Lanka.

**Selection:**

The selection will be based on the performance of the applicants in a written examination and practicaol assessment and oral examination conducted by the University.

These examinations and assessment tests will be held at the University of Jaffna, Thirunelvely.

**Note:** Preference will be given to those candidates who have participated in sports and athletics and won places at District and National level.

**Age:** Should be in the age group of 18- 28 years

The University Senate may relax the age requirement in the case of candidates who are already in the sports profession in Government and non- Government Sectors.

**Duration:** Two years (Internal - Full Time)

**Course Fee:** Rs. 24,000/-

Application forms could be obtained from the Assistant Registrar/Exams & Admissions Branch, University of Jaffna on a payment of Rs. 50/- Duly filled application forms should be submitted to the "Asssistant Registrar/ Exams & Admissions Branch, University of Jaffna" on or before 25.08.2006

**Registrar**

31.07.2006 (சி-50599) (21)

## B.Sc.(Maths) காமராஜர் பல்கலைக்கழகம் (மதுரை)

- ★ பல்கலைக்கழகத்தினால் பட்ட நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- ★ **A/L** இல் ஒரு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- ★ மேற்படி பாட நெறிக்கு எமது நிறுவனத்தினூடாகப் பதிவுகள் நடைபெறுகின்றன.
- ★ விரிவுரைகள் ஆரம்பம்: 05.08.2006 காலை 8 மணி.
- ★ B.A., B.Com., B.B.A. ஆகிய பட்டநெறிக்கும் பதிவுகள் நடைபெறுகின்றன.
- ★ விரிவுரைகள் ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.
- ★ பரீட்சைகள் யாவும் யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- ★ இப்பட்டங்கள் யாவும் இலங்கைப் பல்கலைக்கழக மானியக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவை என்பதை அறியத்தருகின்றோம்.

விவரங்களுக்கு:-
காமராஜர் பல்கலைக்கழகத்தின்
அங்கீகரிக்கப்பட்ட
யாழ்.இணைப்பாளர். (52847)(32-11-19)

**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
T.P.No.: 222 8148,
222 3208, 077 3151358

## Danish Demining Group
## VACANCY NOTICE
## வேலையாள்கள் தேவை

- ★ சமையல் வேலை செய்வதற்கும், வீட்டை சுத்தம் செய்வதற்கும் அனுபவமுள்ள ஒருவர் தேவை.
  - கிராமசேவகர் நற்சான்றிதழுடன் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.
- ★ மேசன் வேலை, தச்சுவேலை, மின்வேலை செய்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் வேலையாளர்கள் தேவை. எதிர்பார்க்கும் நாள் கூலியுடன் தபால் மூலம் விண்ணப்பிக்கவும்.

  விண்ணப்ப முடிவு திகதி – 06.08.2006
- ★ மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்புகொள்ளவும் (அலுவலக நேரம் 8.30-16.30)

**Danish Demining Group,**
18/10, Wyman Road,
Navalar Road,
Jaffna. (52582)

# மரண அறிவித்தல்கள்

## வைத்திலிங்கம் கந்தசாமி



நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் கந்தசாமி 31.07.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் கமலாட்சி மற்றும் செல்லம்மா அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராமநாதன் - இராமாசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் நீலாயதாட்சி (சங்கீத ஆசிரியை), தட்சணாமூர்த்தி, நடேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற நித்தியலெட்சுமி மற்றும் பாலச்சந்திரன், சுசிலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுதர்சனா, சுதர்சன் (பிரான்ஸ்), சுதாகரன், சுதர்சினி, சுமித்திரா, சுரேந்திரன், சுஜாதா, சுஜந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீகந்தராசா (பிரதேச சபை, நயினாதீவு), தர்சினி (பிரான்ஸ்), வசந்தராணி, ஜீவதாசன், கமலதாசன் (பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் - யாழ்), பிரபுதா ஆகியோரின் அன்பு மாமனும் ஐங்கரன் ஜனனி (சுவிஸ்), ஜனார்த்தன், ஜனார்த்தனி, ஜனகராஜ், அபிஷன் (பிரான்ஸ்), கபிஷ்னா (பிரான்ஸ்), சுருதிகா, கவுதமன், மகிஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நயினாதீவு சல்லிபரவை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (52854)(32-19-11)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## ஏரம்பு சிவசுப்பிரமணியம்



கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதியை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, மில் ஒழுங்கை, பிரம்படியை வதிவிடமாகக் கொண்ட ஏரம்பு சிவசுப்பிரமணியம் 01.08.2006 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் உத்தமிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், தம்பிஜயா ஆகியோரின் சகோதரரும் மகேந்திரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), மனோரதி, காலஞ்சென்றவரான மகேஸ்வரன், மகாதேவன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜியலட்சுமி, சாவித்திரி, சிதம்பரநாதன் ஆகியோரின் பாசமிகு மாமனும் அனுசுயா, சுகன்யா, தேசிகன், சாயிஜனனி, தனுசுயா ஆகியோரின் பேரனும் சயந்தவியின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2006) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

61/11, மில் ஒழுங்கை,
பிரம்படி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:
**சி.மகேந்திரன்**
(மகன் - T.O., 'ACLG'S Office, Jaffna).
(52859) (24-32-11-19)

## IDM

Computer Studies Islandwide (PVT) Ltd.
**Affiliated University College**
*216, Navalar Road, Jaffna.* T.P: 021 4591398


இலங்கையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்

A/L பரீட்சை பூர்த்தி செய்த மாணவர்களே!
ஏன் தாமதம்?.கணனித்துறையில் சர்வதேச சான்றிதழ்களைப்பெற இன்றே IDM இல் இணையுங்கள்

**BTEC Edexcel International - UK**

**HND (UK)** Entry Requirements : G.C.E. O/L or G.C.E. A/L

**HND in**
**Computing, Software Engineering, Business Information Technology, Multimedia, Networking.**




**IDM - NATION'S ICT ACADEMY**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நல்லூரர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் தேவஸ் தானத்தின் தெற்கு மண்டபத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. ஆலயப் பூசகர் அடிக்கல்லை நட்டுவைப்பதையும் ஆலய அறங்காவல் குழு மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள் அருகில் நிற் பதையும் படத்தில் காணலாம்.

## சுந்தரர் குருபூசை நிகழ்வுகள்

யாழ். சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் சுந் தரமூர்த்தி நாயனார் குருபூசை இன்று புதன்கிழமை முற் பகல் 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண் டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாட சாலை மாணவிகளின் பஞ்சபுராணம் ஓதல், சுந்தர மூர்த்தி நாயனார் தேவாரம் பாடுதல், பேச்சு என்பன வும் இடம்பெறும். (204)

* * *

புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரி இந்துமன்றத் தின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனார் மற்றும் சேர மான் பெருமாள் ஆகியோரின் குருபூசை இன்று புதன் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளன.

கல்லூரியில் அமைந்துள்ள ஸ்ரீ சோமஸ்கந்தர் ஆல யத்தில் விசேட பூசைகள் இடம்பெற்று தொடர்ந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் ஆ.சிவ நாதனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும். (204)

* * *

முழங்காவில்,ஓக.2

வீரகத்தி விநாயகர் இந்துமாமன்றம் நடத்தும் சுந் தரமூர்த்திநாயனார் குருபூசை இன்று பிற்பகல் 4 மணிக்கு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற வுள்ளது. (203-323)

* * *

வேரவில் வீரகத்தி விநாயகர் இந்துமாமன்ற அற நெறிப்பாடசாலையினர் நடத்தும் சுந்தரமூர்த்தி நாய னார் குருபூசை இன்று பிற்பகல் 2 மணியளவில் வேரவில் இந்துமகாவித்தியாலயப் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாணவர்களது பேச்சு, பஜனை, பண்ணிசை போன்ற கலை நிகழ்வுகளும் சுந்தரமூர்த்திநாயனாரின் குருபூசை தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பரீட் சையில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங் கும் நிகழ்வும் நடைபெறவுள்ளன. (203-323)

# கலாசாரம் பேணும் மையங்களாக எமது ஆலயங்கள் விளங்குகின்றன

## இது பெருமையளிக்கிறது என்கிறார் அரச அதிபர்

நல்லூர்,ஓக.2

எமது கலாசாரத்தைப் பாதுகாக்கும் மையங்களாக ஆலயங்கள் விளங்குகின்றன. இதுபெருமையாக உள்ளது.

- இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஐந்து கிராமங்களில் பொதுநோக்கு மண்டபங் களை அரச அதிபர் திறந்துவைத்தார். இத்திறப்புவிழா நிகழ்வில் அவர் உரையாற்றியபோது கூறியதாவது:-

யாழ். மாவட்டத்தின் வசதி குறைந்த கிராமங் களில் மண்டபம் அமைத்து மக்கள் சேவைக்குப் பயன் படுத்த உதவிய எல்லோருக்கும் எனது பாராட்டுக்கள். மாவட்ட, பிரதேசமட்டங்களில் உள்ள செயலகங்கள் போன்று இவை கிராமிய செயலகங்களாகச் செயற்பட வேண்டும். இதன் முக்கிய நோக்கம் கிராமங்களின் அபிவிருத்தியே. கிராமங்களில் காணப்படும் சகல பொதுஸ்தாபனங்களும் இவற்றைப் பயன்படுத்தமுடி யும். எல்லோரும் ஒருங்கிணைந்து செயற்படவேண் டும்.

கிராமத்தின் தேவைகள் நிறைவுசெய்யப்படவேண் டும் என்று விரும்புவோர் இந்தப் பொதுநோக்குமண் டபங்களுக்குச் சென்றால் நிறைவேற்றக்கூடிய சாத் தியமான வளங்கள் உள்ளன என்ற செய்தி அவர்களுக் குத் தெரிவிக்கப்படவேண்டும். இங்குள்ள ஆலயங் கள் எமது கலாசாரத்தைப் பாதுகாக்கும் மையங்களாக விளங்குகின்றன. இதுகுறித்து நாம் பெருமைப்படமுடி யும்.

பலகுறைகள் இருப்பதாக மகஜர்கள் கையளித் துள்ளார்கள். அவற்றை உடன் நிறைவேற்றுவோம் என்று கூறமுடியாது. எங்களால் முடிந்த முயற்சிகளை மேற்கொண்டு உங்களுக்கு நல்ல முடிவுகளைத் தரு வோம். இங்குள்ள செயற்பாடுகளுக்கு கிராம உத்தி யோகத்தர்கள் வழிகாட்டியாக உங்களுக்கு உதவுவார் கள் - என்றார் அரச அதிபர்.

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் உரையாற்றியபோது கூறியதாவது:-

கிராம நலனில் அந்தக் கிராம மக்களின் பங்களிப்பு கணிசமான அளவு இருத்தல்வேண்டும். கடந்த காலங் களில் அபிவிருத்திச் செயற்பாடுகளில் மக்களின் பங் களிப்பு அரிதாக இருந்தபோதும் இன்று அந்த நிலை மாறியுள்ளது. இந்த மண்டபங்களை அமைக்க காணி களை வழங்கியும் ஏனைய உதவிகளையும் தந்துள் ளீர்கள். எதிர்காலத்திலும் கிடைக்கக் கூடிய அபிவிருத் திச் செயற்பாடுகளில் உங்கள் பங்களிப்பு மிகவும் கூடுதலாக இருக்கும் என்பதை எண்ணும்போது மகிழ்ச்சியாக இருக்கிறது.

உங்கள் கிராமத்தின் அபிவிருத்திக்காக உங்களு டன் இணைந்து பணியாற்றுவதன்மூலம் 'பின்தங்கிய' என்ற வார்த்தையை ஒழிப்பதில் நாங்களும் எமது பணி மனை உத்தியோகத்தர்களும் என்றும் தயாராகவே உள்ளோம் - என்றார். (111)

## சண்டிலிப்பாய் இந்துவில் ஞாயிறு தோறும் வலி.தென்மேற்கு மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.2

வலி.தென்மேற்கு மத்தியஸ்தர் சபை வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் சண்டிலிப்பாய் இந்துக் கல் லூரியில் செயற்படும் என்று சபையின் தலைவர் கு. ஜெகநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வலி.தென்மேற்குப் பிரதேச செயலர் பிரிவினது 28 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியது. இப் பிரிவில் வாழும் மக்கள் பிரச்சினைகள், பிணக்குகள் மற்றும் தவறுகள் என்பவற்றிக்கு சண்டிலிப்பாய் இந் துக்கல்லூரியில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் முற் பகல் 9.30 மணிக்குப் பின்னர் இடம்பெறும் மத்தியஸ் தர் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு தீர்வுகாணலாம்.

தமது முறைப்பாடுகளை ஐந்து ரூபா முத்திரையொட்டிப் பொது மக்கள் பதிவுசெய்யலாம். இந்த முறைப்பாடுகளில் பிணக்குகளா யின் 60 நாள்களுக்குள்ளும் தவறு களாயின் 30 நாள்களுக்குள்ளும் தீர்வு காணலாம். (95)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஓக.2

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சன சமூக நிலைய புதிய நிர்வாகி கள் தெரிவு அண்மையில் நடை பெற்றது.

த.பேரின்பநாதன் தலைவராக வும், க.வசந்தகோகுலன் செயலா ளராகவும், த.தசரதன் பொருளாள ராகவும் தெரிவுசெய்யப்பட்டுள் ளனர். (204)

* * *

தென்மராட்சி,ஓக.2

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழக புதிய நிர்வாகிகள் பதவி யேற்பு வைபவம் அண்மையில் நடைபெற்றது.

லயன் எஸ்.திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெற்ற நிகழ் வில் லயன் ரி.சிறீராமநாதன் தலை வராகவும், சே.நடராசா செயலாள ராகவும் எஸ்.அருணாசலம் பொரு ளாளராகவும் பதவியேற்றுள்ளனர். (207-31)

* * *

சாவகச்சேரி இந்துக் கல்லூரி லியோ கழகப் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நிகழ்வு அண்மை யில் நடைபெற்றது.

கல்லூரியின் லியோ கழகப் பொறுப்பாசிரியர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் லியோ கு.நிசாந்தன் தலைவராகவும் ச. சதுர்சியா உப தலைவராகவும், சி. கார்த்தீபன் செயலாளராகவும் ஜெ. ரஜீவ்லால் பொருளாளரா கவும் பதவியேற்றுள்ளனர். (204-117)

* * *

குருநகர்,ஓக.2

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலக நலன்புரிக் கழகத்தின் புதிய செயற் குழு தெரிவு நடைபெற்றது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ. கேதீஸ்வரன் தலைவராகவும், எஸ். நடேசன் செயலாளராகவும் [illegible] கலைச்செல்வன் பொருளாளரா கவும் தெரிவுசெய்யப்பட்டனர். (204-41)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.2

நல்லூர் உற்சவ கால நான்காம் நாளான இன்று புதன்கிழமை இந்து கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின் ஆதரவில் நாவ லர் மணிமண்டபத்தில் 'சுந்தரரின் பக்தி நெறி' என்ற பொருளில் சைவப் புலவர் நித்தியதசிதரனின் சிறப்புச் சொற்பொழிவும் வடலி யடைப்பு இந்து அபிவிருத்திச் [illegible] வர்களின் [illegible] யும் இடம்பெறும். (203-111)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

## 4ஆம் திருவிழா




### இல்லை இடர் என்ற சொல்லை அருள்

வெள்ளை சடாமுடி
தரித்த கிழவனாய்த்
தோன்றியே - அன்று
வள்ளியெனும் மாதை
வளைத்து மணந்தனை
காட்டிலே
குள்ளநரிக்குணம்
கொண்ட மனிதர்கள்
நாட்டிலே - எம்மை
பள்ளம் பறித்திங்கு
புதைக்க முனைகிறார்
அறிகுவை!

முல்லை நிகர்த்த புன்
முறுவல் உதிர்த்திடும்
வேலவா - எம்மின்
தொல்லை அகன்றிட
தோற்றம் களைவாயே
வேலவா!
நல்லை நகரிலே
நாளும் அருள்தரும்
நாயகா! - இனி
இல்லை யிடர் என்ற
சொல்லை அருள் சிவன்
பாலகா!

- சிபொரு

### எந்தன் தெய்வம் முருகன்

எந்தன் தெய்வம் முருகன் - அவன்
வண்ண அழகுக் குமரன்
எங்கும் நிறைந்தவன் அழகன்
மனதில் இன்பம் தருவான் வேலன்

வேலுடன் காட்சிக் கோலம் - எனக்கு
வேண்டும் வரம் தருவான்
பச்சை மயிலில் வருவான் - பக்தர்
உள்ளமதில் குடி இருப்பான்.

- க.கிருஷ்ணசாமி

### கயமை இன்றி வாழக் காத்திடுவாய்!

நல்லை நகர் கோயில் கொண்ட நல்லூரானே!
நாணி நிற்கும் எம் மக்களை நானிலம் போற்ற
- வைத்திடையா!
ஆணவம் கொண்டசூரனை அணுவாய் துளைத்தவரே!
ஆதாரம் இன்றி அல்லாடும் மக்களும் ஆய வழி
- காட்டிடையா!
பிரமனையே சிறைப்பிடித்த பிரமத்தின் உட்பொருளே!
பித்துப்பிடித்து அலையும் பித்தர்களை விலக்கிடையா!
கயவர்களைத் துடைத்தெறிந்து தேவர்களைக் காத்தவரே!
கயமை இன்றி காலமெல்லாம் வாழ கடமையுடன்
- காத்திடுவாய்.

- க.கபிலைவாசன்.

### சக்தியருள் சண்முகனே!

கோலமயில் மீதேறிக் கோடிபக்தர் புடைசூழக்
கண்குளிரக் காட்சிதரும் கவின்நல்லை நாயகனே!
வேல்தனைக் கரமேந்தி வெந்துயரை வேரறுக்க
வளநல்லைத் திருவீதி வலம்வரும் வேலவனே!
ஞாலமுயர் நல்லைநகர் நற்பதம் நாடிநிதம்
நண்ணும் அடியார்க்கு நலமருளும் நல்லோனே!
சீலம்மிகு நம்பதியில் சமாதானம் நிலைத்துச்
சகவாழ்வு சோபிக்கச் சக்தியருள் சண்முகனே!

- தே.சுகிர் நாகேந்திரா

விழா சிறப்புற
வாழ்த்துவோர்:

விதம் விதமான முகூர்த்தப் பட்டுப்
புடைவைகளுக்கும்
றெடிமேட் ஆடை வகைகளுக்கும்

கிறீன்பலஸ் எம்போறியம்

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

(சி/50018) (24-45-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமான தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

வெளியீடு 20

# புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாப்பத்திரம்

ஜனாப்.புன்னியாமீன்/ ஜனாபா மஸீதா புன்னியாமீன் - கண்டி

வினாத்தாள் I நேரம்: 45 நிமிடங்கள்

சகல வினாக்களுக்கும் விடையளிக்க

★ இல. 1 - 32 வரையிலான எல்லா வினாக்களுக்கும் மூன்று விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. இவற்றினுள் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. கீழே தரப்படுகின்ற எல்லா கருத்துகளுடனும் மிகப் பொருந்துகின்ற உருவைத் தெரிவு செய்க.
சிங்கத்தின் வாய் - சுவர்க்கவிதை - சுவரோவியம்



1 2 3

02. உருவை மிக நன்றாக விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.
1. அழகு, பாதுகாப்பு, நன்மை
2. குளிர், மழை, செழிப்பு
3. மழை, வெயில், காற்று



★ கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து 3ஆம் 4ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| | |
|---|---|
| வில்லைப் போன்று இரவினிலே<br>வானில் தோன்றுதே<br>மெல்ல மெல்ல தினம் வளர்ந்து<br>வட்டமாகுதே | பகலைப் போல இரவில் வானில்<br>ஒளியைச் சிந்துதே<br>பகலவனாய் இரவிலெமக்கு<br>பணிகள் புரியுதே |

03. இந்தப் பாடலில் குறிப்பிடப்படுவது இயற்கையில் எந்த அம்சத்தைப் பற்றியதாகும்?
1. வானவில் 2. சந்திரன் 3. பகலவன்


04. 'பகலவனாய் இரவிலெமக்குப் பணிகள் செய்யுதே' என்பதன் கருத்தாவது:
1. பகல் நேரத்திலும் எமக்குப் ஒளியைத் தருகிறது
2. பகலிலும் இரவிலும் எமக்குப் பணிகள் புரிகின்றது
3. இரவைப் பகலாக்கி எமக்கு ஒளியைத் தருகிறது.

★ 05ஆம் 06ஆம் வினாக்களுக்காக வெற்றிடங்களுக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்க.

05. நாளை - நேற்று எனின் புதன்கிழமை.............
1. செவ்வாய்க்கிழமை 2. வியாழக்கிழமை 3. திங்கட்கிழமை


06. சப்பாத்து - .................... எனின் உடை - துணி
1. காலுறை 2. நூல் 3. தோல்

07. ஒத்த உருக்களைக் கொண்ட உருக்கூட்டம் எது?




★ இல. 8- 10 வரையிலான வினாக்களில் முதலாம் உருவுடன் மிகவும் கிட்டிய தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க.

08.



வினாக்கிரி கருப்பட்டி தே. எண்ணை

09.



10.



★ தரப்பட்டுள்ள கூற்றுகளுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

11. சேவடிக் கிராமத்தில் உள்ள எல்லா வீடுகளினதும் கூரைகள் ஓடு அல்லது ஓலையால் வேயப்பட்டுள்ளன. ஓட்டுக் கூரையுள்ள வீடுகள், ஓலைக் கூரையுள்ள வீடுகளை விட எண்ணிக்கையில் குறைவாகும். இதன்படி.
1. தகரக் கூரையுள்ள வீடுகளும் இக்கிராமத்தில் உண்டு.
2. ஓலைக் கூரையுடைய வீடுகளே அதிகமாக உள்ளன.
3. ஓட்டுக் கூரையுடைய வீடுகளே அதிகமாக உள்ளன.


12. எதிர்பாராத விதமாக மழை பெய்யத் தொடங்கினால் நீங்கள் செய்ய வேண்டிய காரியம் எது?
1. எங்கும் தங்காமல் மழையில் நனைந்தபடி வீட்டுக்கு ஓடிச் செல்ல வேண்டும்.
2. நனையாத இடமாகப் பார்த்து மழைவிடும் வரை ஒதுங்கியிருக்க வேண்டும்.
3. உடனடியாகக் குடையொன்றை வாங்கிப் பிடித்துக் கொண்டு செல்ல வேண்டும்.

13. இரவு நேரத்தில் மின்சாரம் தடைப்பட்டால் நீங்கள் செய்ய வேண்டியது யாது?
1. உடனடியாகப் படுக்கைக்குச் சென்று கண்ணை மூடிக்கொள்வேன்.
2. பயந்து கத்திக் கொண்டு அம்மாவைத் தேடி ஓடுவேன்.
3. ஒளியொன்றை வீட்டிலுள்ளவர்கள் ஏற்படுத்தும் வரை அசையாமல் ஒரே இடத்திலே இருப்பேன்.

14. இன்று புதன்கிழமை, நாளை மறுநாள் தனது பிறந்த தினம் என்று நேற்று முன்தினம் புவனா என்னிடம் கூறினாள். புவனாவின் பிறந்த தினம் எப்போது?
1. வெள்ளி 2. புதன் 3. வியாழன்


15. சிலர் பறவைகளைக் கூடுகளுக்குள் அடைத்து வளர்த்து மகிழ்வர். நீரும் சுவையான ஆகாரமும் வழங்குவர். அதற்கு வேண்டிய சகல வசதிகளையும் கூட்டுக்குள்ளேயே செய்து கொடுப்பர்.
1. அவ்வாறு வளர்க்கப்படும் பறவைகள் பிற விலங்குகளிடமிருந்து தகுந்த பாதுகாப்பைப் பெறுகின்றன.
2. பறவைகளுக்கு அவை வாழும் சூழலேயே வாழ்வதற்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.
3. பறவைகளைக் கூட்டில் அடைத்து வளர்ப்பது மனதுக்கு இன்பம் தருகின்ற ஓய்வு நேரப் பொழுதுபோக்காகும்.

16. உருவில் காட்டப்பட்டுள்ள மதில் பழுதடைந்த நிலையில் அதில் துளை ஏற்பட்டுள்ள விதத்தைக் கருநிற நிழல் காட்டுகிறது. இத்துளையை அடைக்கத் தேவையான செங்கற்களின் எண்ணிக்கை எவ்வளவு?
1. 9 2. 18 3. 10




17- 20 வரையிலான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள மூன்று உருக்களினதும் தொடர்பை அவதானித்து அடுத்ததாக வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.


17.




18.



19.



20.



★ ஒன்றுக்கு ஒன்று பொருத்தமில்லாத சோடிச் சொல் எது?

21. 1 பனை, ஓலை
2. கரும்பு, சீனி
3. எள், நல்லெண்ணெய்

22. 1. தேனீ, பூக்கள்
2. மாடு, புல்
3. மரங்கொத்தி, பழம்

23. வித்தியாசமான கருத்தைத் தரும் ஒரு சொல்லைக் கொண்ட சொற்கூட்டம் எது?
1. தினசரி, நாளிதழ், நாளேடு, பத்திரிகை
2. குவலயம், காசினி, விசும்பு, பார்
3. இரவி, சூரியன், கதிரவன், அருணன்

24. மிகச் சரியான கருத்தைத் தரும் வாக்கியம் எது?
1. வைத்தியசாலையில் தாதிக்கு நோயாளி ஊசி மருந்தேற்றினார்.
2. வைத்தியசாலையில் தாதியால் நோயாளிக்கு ஊசி மருந்து ஏற்றப்பட்டது.
3. வைத்தியசாலையால் நோயாளிக்கு தாதி ஊசி மருந்து ஏற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாரின் ஆயர்பணிக்கான 25ஆவது ஆண்டு வெள்ளிவிழாக் கொண்டாட்டம் ஊர்காவற்றுறையில் திங்களன்று இடம்பெற்றது. அதன்போது ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மாணவர்களின் 'பான்ட்' வாத்திய இசையுடன் மோட்டார் பவனியாக யாழ்.ஆயரும் பாப்பரசரின் தூதுவர் வண. செனறியும் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதை முதல் இரு படங்களிலும் ஆயரை வரவேற்கப்படுவதை மூன்றாவது படத்திலும் யாழ்.ஆயர் ஏற்புரை நிகழ்த்துவதை நான்காவது படத்திலும் காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

## ஆனைக்கோட்டை ஆலயத்துக்கு மணிக்கோபுரம்

ஆனைக்கோட்டை சிவன் வீதியிலுள்ள தலைமடைப் பிள்ளையார் ஆலயத்திற்கு புதிய மணிக்கூண்டுக் கோபுரமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வூரைச் சேர்ந்த அமரர் வல்லிபுரம் செல்வராசாவின் ஞாபகார்த்தமாக அண்மையில் இது அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (204-100)

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முன்பள்ளி ஆசிரியர்களைக் கலந்து கொள்ளுமாறு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தினர் கேட்டுள்ளனர். (204)

# வதைபடும் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆக்கிரமிப்பாளரை விரட்டியதே வரலாறு

## கோப்பாய் பொது அமைப்புகளின் ஒன்றியம் அறைகூவல்

வதைக்கப்படும் மக்கள் கிளர்ந்தெழுந்து ஆக்கிரமிப்புப் படைகளை விரட்டியடித்து விடுதலையை வென்றதாகவே வரலாறு உண்டு.

- இவ்வாறு கோப்பாய் பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

தமிழர் தாயகப் பிரதேசம் எங்கும் மஹிந்த அரசு பிரகடனப்படுத்தப்படாத மறைமுக யுத்தம் ஒன்றை திணித்துள்ளது. இதன் வெளிப்பாடு அண்மைக்காலமாக அப்பாவிப் பொது மக்கள் மீதான இராணுவத் தாக்குதல்கள், வெள்ளைவான் கடத்தல்கள், மாணவ மாணவிகள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள், அச்சுறுத்தல்கள், சித்திரவதைகள் போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்கும் போராளிகளின் நிலைகள் மீதான விமானத் தாக்குதல்கள் பொதுமக்கள் குடியிருப்புகள் மீதான விமான, ஷெல் தாக்குதல்கள் போன்றவற்றின் மூலம் பாரிய யுத்தம் ஒன்றை முன்னெடுப்பதற்கான சமிக்ஞைகளை வெளிப்படுத்தி நிற்கின்றது.

மஹிந்த அரசானது சமாதானம் என்று சர்வதேசத்திற்கு சொல்லிக்கொண்டு தமிழர்களைக் கொன்று குவிக்கும் மறைமுக இரட்டை வேட அரசியலில் தமிழ் மக்களை பகடைக் காய்களாக நகர்த்துகின்றது. காலம் காலமாக தமிழ்மக்களை ஏமாற்றிய சிங்கள பேரினவாத அரசுத் தலைமைகளின் மாய வலைக்குள் சிக்குவதற்கு இனியும் நாம் தயாராக இல்லை. எமது மண்ணில் இனவெறிபிடித்து அலையும் சிங்கள கொலை வெறியர்கள் தொடர்ந்தும் நிலைத்து நிற்பதை இனியும் அனுமதிக்கமுடியாது.

சிங்கள பேரினவாத இராணுவத்திற்கு அடிமைப்பட்டு அல்லற்பட்டு அஞ்சுவதற்கு தமிழர்கள் ஒன்றும் கோழைகள் அல்ல. ஆண்ட தமிழர் ஆழப்போகும் தமிழினம் - அஞ்சா நெஞ்சமும் வீரமும் கொண்ட இனம் யாழ்.குடாநாட்டை விட்டு அந்நியப் படைகள் வெளியேறும்வரை தமிழர்கள் ஓயமாட்டார்கள். தொடர்ந்தும் எம்மண்ணில் அந்நியப் படைகள் நிலைகொண்டிருக்குமானால் பொது அமைப்பினர், மாணவர்கள், பொது மக்கள் என அனைவரும் பொங்கி எழுந்து ஆயுதம் ஏந்துவர். அப்போது விளைவுகள் மேசமாகும்.

- என்றுள்ளது.

# சங்கானையில் விஷமிகள் கைவரிசை; சைக்கிள் பயணிகளுக்கு அல்லல்

சங்கானை பஸ் நிலையத்துக்கு அருகே நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்களின் சக்கரங்களின் காற்றை விஷமிகள் திறந்துவிட்டனர். இதனால் அரசு ஊழியர்கள், மாணவர்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டனர்.

சங்கானையைச் சூழவுள்ள பகுதிகளில் வசிக்கும் அலுவலக ஊழியர்கள் மாணவ, மாணவிகள் ஆகியோர் தமது இருப்பிடங்களிலிருந்து காலையில் சைக்கிள்களில் சங்கானை பஸ் நிலையத்துக்கு வருகின்றனர். இவர்கள் அங்குள்ள மீன் சந்தைக்கு முன்பாக வீதியோரத்தில் சைக்கிள்களை நிறுத்திப் பூட்டி விட்டு பஸ்களில் அலுவலகங்களுக்கோ, பாடசாலைகளுக்கோ செல்கின்றனர். பின்னர் திரும்பி பஸ்ஸில் வந்து சைக்கிள்களில் இருப்பிடங்களுக்குச் செல்வது வழக்கமாகும்.

கடந்த மாதம் 26ஆம் திகதி இவ்வாறு நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள்களின் சக்கரங்களில் விஷமிகள் காற்றைத் திறந்துவிட்டனர்.

இதனால் பிற்பகலில் வீடு திரும்ப வந்தவர்கள் சைக்கிள்களில் செல்லமுடியாது தவித்தனர். விஷமிகள் காற்றைத் திறந்ததுடன் 'வால்வ் கட்டை'களையும் திருடிச் சென்றதால் மாணவ மாணவியர் பெரும் சிரமத்தை அடைந்தனர். (29)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்

நல்லூர்,ஓக.2

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 'மஹிந்த சிந்தனை' அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் வீட்டுத்திட்டம் அமைக்க 40லட்சம் ரூபாவும் நலிவுற்றோருக்கு சுய தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுக்க 10 லட்சம் ரூபாவும் நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம் புனரமைப்புச் செய்ய 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் -

கொக்குவில் பிரம்படி சனசமூக நிலையத் திருத்தத்துக்கு 2 லட்சம் ரூபாவும் காரைக்கால் பத்திரகாளி கோயில், கோண்டாவில் வீரபத்திரர் கோயில் ஆகியவற்றின் பொதுக் கிணறுகளுக்கு தலா 75 ஆயிரம் ரூபாவும் நல்லூர் முருகன் சனசமூக நிலையம் புனரமைப்புக்கு 2 லட்சம் ரூபாவும் -

கோண்டாவில் றோ.க.பாடசாலை தண்ணீர்த் தாங்கி திருத்த வேலைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கோண்டாவில் மத்தி மாதர் கிராம அபிவிருத்திச் சங்க பாலர் பாடசாலை புனரமைப்புக்கு 3 லட்சம் ரூபாவும் -

திருநெல்வேலி மகாத்மாஜி சனசமூக நிலைய திருதத்திற்கு ஒரு லட்சம் ரூபாவும் கொக்குவில் நலன்புரி நிலையத்துக்கு குழாய்க்கிணறு, தண்ணீர்த்தாங்கி என்பன அமைக்க 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் அரியாலை பூமகள் வீதி, ஆசீர்வாதப்பர் வீதி புனரமைப்புப் பணிகளுக்கு தலா 2லட்சம் ரூபாவும்நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (204-111)

# வட்டுக்கோட்டையில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஓக.2

வட்டுக்கோட்டை பொதுச் சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படவுள்ள நாள், இடம், நேரம் பற்றிய விவரங்கள் வருமாறு:-

நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11 மணிவரை தாவளை ச.ச. நிலையம், ஜனசக்தி ச.ச. நிலையம், அறிவொளி ச.ச. நிலையம், முற்பகல் 11.30 மணி முதல் 1.30 மணிவரை போரூட் சந்தி சித்தன்கேணி லயன்ஸ் கிளப், சித்தன்கேணி பிள்ளையார் கோயிலடி - 11.30 மணிமுதல் 3.30 மணிவரை தாவளை வைரவர் கோயிலடி, கள்ளி ஒழுங்கைச் சந்தி, சிவனடியான் கிளினிக் சந்தி -

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11.30 மணிவரை கலட்டி ஒழுங்கை வட்டுக்கோட்டை மேற்கு கிராம அலுவலர் அலுவலகம், துணவி உப தபாலகம் - முற்பகல் 11.30 மணிமுதல் 1.30 மணிவரை சங்கரத்தைக் குளத்தடிச் சந்தி, ஓடக்கரை வீதி கடையடி, சங்கரத்தை கிராம அலுவலர் அலுவலகம், 1.30 மணிமுதல் 3.30 மணிவரை துணவி வளர்மதி ச.ச. நிலையம், கலைவாணி ச.ச. நிலையம், பிளாக் வீதி -

எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 11.30 மணிவரை மூளாய் வீதியிலுள்ள செல்லத்துரை கடையடி, லீலா கடையடி, கரன் ஸ்ரோர்ஸ் - முற்பகல் 11.30 மணிமுதல் 1.30 மணிவரை காளி கோயிலடி, உடுக்கியவளை வீதியிலுள்ள இராசேந்திரம் கடையடி, ஏகாம்பரம் கடையடி, 1.30 மணிமுதல் 3.30 மணிவரை மாவடிச் சந்தி, சத்தியா ஹாட்வெயர் வட்டுக்கோட்டை உப அலுவலகம்.

மேற்படி இடங்களில் [illegible] களுக்குத் தடுப்பூசியை ஏற்றிப் பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# வாசகர் திருமுகம்

## கல்லும் மண்ணும் குவித்த பின்னும் கரம்பன் வீதி திருத்தப்படவில்லை

ஊர்காவற்றுறை பிரதேச சபைக்குட்பட்ட கரம்பன் - கண்ணகை அம்மன் வீதியின் திருத்த வேலைக்கென கற்களும் மண்களும் வீதியில் பறிக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்து விட்டன. இன்னும் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் போக்குவரத்தில் பெரும் நெருக்கடிகளைப் பயணிகள் எதிர்கொள்ள நேரிடுகின்றது.

கடந்த ஆண்டு இந்த வீதி திருத்தப்படாமை குறித்தும், திருத்தப்படவேண்டியதன் அவசியம் குறித்தும் பத்திரிகைச் செய்திகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன. அதன் பயனாக ஊர்காவற்றுறை வீதியின் திருத்தப் பணிகள் ஆரம்பிக்க முன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு கற்களும் மணலும் வீதியோரம் குவிக்கப்பட்டன. அவ்வாறு [illegible]ிக்கப்பட்டு 6 மாதங்களைக் கடந்த போதும் இன்று வரை மேலதிக புனரமைப்பு வேலைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

வீதியின் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமையால் போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவையும் இந்த வீதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து உடன் வீதியைப் புனரமைக்க ஆவன செய்யவேண்டும்.

யாழ்ப்பாணம். பே.கி.பாலேந்திரா.

## தாதிய பயிற்சிக்கான தெரிவில் உயிரியல் மாணவர் புறக்கணிப்பு

கடந்த ஏப்பரல் மாத வர்த்தகமானியில் சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட அறிவித்தலின்படி 2005 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் உயிரியல் பிரிவில் தோற்றிய வடக்கு - கிழக்கில் வதியும் மாணவர்கள் தாதியப் பயிற்சிக்கு விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டிருந்தனர்.

இதன் பிரகாரம் அனுப்பப்பட்டிருந்த அனுமதி கோரியோருக்கான நேர்முகப் பரீட்சைக்கு உயிரியல் பிரி[illegible]ல் உள்ள மாணவர்கள் பலர் புறக்கணிக்கப்பட்டு கணிதப் பிரிவைச் சார்ந்தவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இத்துறையை நம்பி பெரிதும் எதிர்பார்த்திருந்த நாம் எதற்காகப் புறக்கணிக்கப்பட்டுள்ளோம் என்பதை தாதிய பயிற்சி கல்லூரி அதிபர் எமக்கு அறியத் தருவாரா?

பல்கலைக்கழக மற்றும் கல்வியியற் கல்லூரி அனுமதிகளை தவறவிட்ட எமக்கு இத்துறை தான் வாழ்வை தீர்மானிக்கவிருந்தது.கணிதத்துறை மற்றும் வேறு துறைகளை சார்ந்தவர் சுற்று நிருபத்தின்படி அனுமதி கோரமுடியாது. இவர்களுக்கு வேறு பல துறைகள் உள்ளன. எமக்கு பெரும்பாலும் இத்துறையே உதவி. வடக்கு - கிழக்கு தாதிய சங்கத்தினர் வேறு துறைகளை சார்ந்தவர்கள் அனுமதிக்க வேண்டாம் எனக் கோரியிருந்[illegible]ார். இதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சு உடன்பட்டிருந்தது. எனினும் பின்பு எதற்காக நாம் புறக்கணிக்கப்பட்டுள்ளோம். கடந்த காலங்களில் உயிரியல் பாடத்தில் மூன்று சாதாரண சித்திகளை பெற்றவர்கள் கூட அனுமதிக்கப்பட்டனர். உயிரியல் பிரிவு மாணவர்களினை எடுத்த பின்புதான் மற்றவர்கள் கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவேண்டும். இதனால் பாதிக்கப்பட்ட எமக்கு நியாயம் கிடைக்குமா?

தென்மராட்சி.

பாதிக்கப்பட்ட மாணவர் சார்பில்
ரி.எஸ்.குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி ஜெயமாலா மகாதேவன்

தோற்றம் 1962-09-03

மறைவு 2003-08-02

ஆண்டுகள் மூன்று ஆகிவிட்ட
நிலையில் உங்கள் கனவை
நனவாக்க அத்திபாரம்
போட்டுவிட்டோம் - அம்மா!
அப்பாவின் வழித்துணையுடன்
நிமிர்வோம் - அம்மா!
உங்கள் கனவை
நனவாக்குவோம் - அம்மா!


'ஜெயநிகேதன்',
பங்களா லேன்,
மல்லாகம்.

(52824) (24-19-14)

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
கணவர் - பொ.மகாதேவன்,
பிள்ளைகள் - துவா, தனு,சோனு.

---

# நெஞ்சை விட்டகலா முதலாம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் தவராசா சுகந்தன்

திதி : அட்டமி 02.08.2006 புதன்கிழமை

தோற்றம் 28 . 05 . 1978

கண்ணீரும் கம்பலையும் எமதாக்கி
காலனவன் கைப்பிடிக்கு நீயானோயா
பேரிடியால் எமைப் பித்தாக்கி
காரிருளில் கணத்தில் எமைப் பிரிந்தாயோ!
தந்தையின்றிப் பாலகனைத் தவிக்கவிட்டு
தனிமை வழி நாட வயசும் ஆனதோ!
இரவுகள் பல விடிந்தாலும் எம்
இதய சோகம் விடியாது சுகந்தா!
இனியொருகால் உம் வதனம் இங்கே கண்டு
இதம் பெறுதல் ஆகாதோ?
ஆண்டொன்றாயினும் ஆறுதில்லை எம் மனசு
உம் ஆன்மா ஈடேறத் தொழுகின்றோம்.

மறைவு 13 . 08 . 2005

இல.89/2,
பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(52642) (39-19-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆழிப் பேரலையால் பாதிக்கப்பட்ட

# முல்லை. பாடசாலைகளுக்கு காணி இருந்தும் இதுவரை கட்டடங்கள் அமைக்கப்படவில்லை

### பெற்றோர் விசனம்

புதுக்குடியிருப்பு,ஓக.2

முல்லைத்தீவில் ஆழிப்பேரலையால் அழிவடைந்த பாடசாலைகளை மீள அமைப்பதற்குக் காணிகள் ஒதுக்கப்பட்டபோதும் மேலதிக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லையெனப் பெற்றோர் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

ஆழிப்பேரலையின்போது முல்லைத்தீவில் மூன்று பாடசாலைகள் முழுமையாகவும் 11 பாடசாலைகள் பகுதியாகவும் அழிவடைந்தன.

• முல்லைத்தீவு ம.வி., முல்லைத்தீவு றோ.க.வித்தி., கள்ளப்பாடு அ.த.க. ஆகிய பாடசாலைகளே முற்றாக அழிவடைந்தனவாகும்.

இதில் முல்லைத்தீவு ம.வி., முல்லைத்தீவு றோ.க. வித்தி. ஆகிய பாடசாலைகளை அமைப்பதற்கு புதிய காணிகளை அரச அதிபர் தெரிவுசெய்துள்ளபோதும் அவற்றில் கட்டடங்களை அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

இதேவேளை - இரண்டு பாடசாலைகளையும் அமைக்கவென 168 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. சுமார் ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட இந்தப் பாடசாலை மாணவர்கள் தற்போது தற்காலிக கொட்டகைகளிலும் மர நிழல்களிலும் கல்வி கற்று வருகின்றனர்.

மாரிகாலங்களில் இவர்கள் கல்விச் செயற்பாட்டைத் தொடரமுடியாது போகும் நிலைமை ஏற்படும்.

எனவே, உரியவர்கள் இவ்விடயங்களில் விரைவில் அக்கறை கொண்டு மாணவர்களில் கல்வியைப் பேண முன்வர வேண்டுமெனப் பெற்றோர் கேட்டுள்ளனர்.

இதேவேளை - கள்ளப்பாடு அ.த.க. பாடசாலைக் கட்டட வேலைகள் 75 சதவீதம் நிறைவடைந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-353)



கிளிநொச்சி மத்திய கல்லூரியில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவில் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களையும் கல்லூரியின் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பொறுப்பாசிரியை திருமதி லதா ரகுநாதன், வன்னிப் பிராந்திய ஆணையாளர் சிறிதரன், கல்லூரி அதிபர் சி.இராஜமகேந்திரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.
(படம்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)

# மேட்டுநிலங்களில் வாழும் மக்கள் தண்ணீர் இன்றிப் பெருஞ்சிரமம்

ஒட்டுசுட்டான்,ஓக.2

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மேட்டு நிலங்களில் வாழ்கின்ற மக்கள் தண்ணீர் வசதியின்றிப் பெருஞ்சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தற்போது நிலவும் கோடைகாலம் காரணமாக இவர்களுக்குத் தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கெருடமடு, பேராறு, சின்னச்சாளம்பன், பெரியசாளம்பன், ஜீவநகர், வசந்தபுரம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களே இந்நிலைமையை எதிர்நோக்கியுள்ளனர்.

இவர்கள் குடிதண்ணீர் மட்டுமன்றி, ஏனைய தேவைகளுக்கும் தேவையான தண்ணீரைப் பெறமுடியாத நிலையிலேயே உள்ளனர்.

தண்ணீர் வசதியின்மையால் இக்கிராமங்களில் சுகாதாரத்தைப் பேணமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இக்கிராம மக்களுக்குத் தண்ணீர் வசதியை ஏற்படுத்திக்கொடுப்பது உரியவர்களின் கடமையாகும். (203-341)

## இருதய சிகிச்சைக்கு சிறுமிக்கு நிதியுதவி

பரந்தன்,ஓக.2

இருதய நோயினால் பாதிக்கப்பட்ட சிறுமி ஒருவருக்குச் சிகிச்சைகளை மேற்கொள்ளவென தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் விசேட மருத்துவ சேவைப் பிரிவினர் 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளனர்.

முல்லைத்தீவு, சிலாவத்தை, 3ஆம் கட்டையைச் சேர்ந்த சற்குணராசா டிலக்சனா (வயது 8) என்ற சிறுமிக்கு சிகிச்சைகள் மேற்கொள்ளவே இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலைக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் சி.வின்சன் சிறுமியின் தந்தையிடம் பணத்தை வழங்கினார். (203-352)

# சுகாதார சேவையினரின் அனுமதியுடன் பூநகரியில் மருத்துவம் செய்யவேண்டும்

### பிரதேச இணைப்பாளர் அரவிந்தன் தெரிவிப்பு

வெள்ளாங்குளம்,ஓக.2

தமிழீழ சுகாதார சேவையினரின் அங்கீகரிக்கப்பட்ட - அனுமதி பெறாதவர்கள் பூநகரிப் பிரதேசத்தில் வைத்தியம் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று பூநகரிப் பிரதேச இணைப்பாளர் அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சுதேச, ஆயுள்வேத, விசக்கடி, எலும்பு முறிவு போன்ற வைத்தியங்களில் ஈடுபடுவோர் தமிழீழ சுகாதார சேவையினரால் விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பிற்கமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும்.

சுகாதார சேவையினரின் அனுமதியின்றிக் கடமைபுரிந்தவர்கள் இனங்காணப்பட்டு அவர்களது சேவை இடைநிறுத்தப்பட்டுமுள்ளது.

வைத்தியம் செய்வோருக்கு சுதேச பரம்பரையினர், பட்டப் பயிற்சிகள் பெற்றவர்கள், சுதேச மருத்துவச் சான்றிதழ்கள் பெற்றவர்களான சுகாதார சேவையினரால் அங்கீகரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இச்செயற்பாட்டை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.(203-415)

## வெடிவிபத்தில் மரணமானவர்களின் வித்துடல்கள் விதைப்பு

கிளிநொச்சி,ஓக.2

கிளிநொச்சிப் பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றின்போது காயமடைந்து பின்னர் வீரச்சாவடைந்த வீரவேங்கை அருள்முதல்வனின் வித்துடல் கிளிநொச்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

• பிரதேசப் பொறுப்பாளர் இதயன் தலைமையில் வட்டக்கச்சி மாயவனூர் பொது மண்டபத்தில் வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து உடையார்கட்டிலுள்ள மட்டக்களப்பு - அம்பாறை மாவீரர் நினைவு மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, அங்கு பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது.(203-307)

* * *

வெள்ளாங்குளம்,ஓக.2

முல்லைத்தீவு மாவட்டத்தில் தவறுதலாக இடம்பெற்ற வெடி விபத்தின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை ராம்குமாரின் வித்துடல் முழங்காவில் மாவீரர் பொதுமண்டபதில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தொடர்ந்து முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துவரப்பட்டு பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது. (203-415)

* * *

வெள்ளாங்குளம்,ஓக.2

புளியங்குளம் பகுதியில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை நித்தியானந்தத்தின் வித்துடல் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டது.

முதலில் அவரது இல்லத்திலும் ஆனைவிழுந்தான் பைந்தமிழ் படிப்பகத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு வித்துடல் விதைக்கப்பட்டது. (203-415)

## முன்பள்ளிச் செயலகம் முல்லையில் திறப்பு

பரந்தன்,ஓக.2

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் முல்லைத்தீவுச் செயலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் முல்லைத்தீவு முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் நடைமுறைப்படுத்தலில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.ஜெயம் சபாபதி இந்நிகழ்வில் கலந்துகொண்டு செயலகத்தைத் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வின்போது முன்பள்ளி ஆசிரியர்களதும் சிறார்களதும் இயல்பான உறவைப் பேணுதல் என்னும் விடயம் தொடர்பான பயிற்சிகளும் இடம்பெற்றன. (203-352)

## கிரவல் பறிக்கப்பட்டதால் போக்குவரத்துச் சிரமம்

புதுக்குடியிருப்பு,ஓக.2

விசுவமடு குளத்திற்குச் செல்லும் பிரதான வீதி கடந்த 5 மாதங்களாகக் கிரவல் கொட்டப்பட்டுள்ள நிலையில் புனரமைப்புச்செய்யப்படாதுள்ளதால் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்யமுடியாது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிரவல் கொட்டப்பட்டுள்ளமையால் இவ்வீதியால் வாகனங்கள் பயணம் செய்யமுடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இவ்வீதியால் பாடசாலை மாணவர்கள் உட்படப் பெருமளவானோர் பயணம் செய்வதால் உரியவர்கள் இவ்விடயத்தில் கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (203-353)




# கூரைவேலைகள் பூர்த்தியாக்கப்படவில்லை; முன்பள்ளி மாணவர்கள் இடமின்றிச் சிரமம்

ஒட்டுசுட்டான்,ஓக.2

முத்துஐயன்கட்டு, முதலாம்கண்டம் முன்பள்ளிக்கென அமைக்கப்பட்ட கட்டடத்தின் கூரை வேலைகள் பூர்த்திசெய்யப்படாத நிலையில் உள்ளமையால் முன்பள்ளி மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதுவரை காலமும் இந்த முன்பள்ளி ஒரு சிறிய இடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் இதற்கென அமைக்கப்பட்டுவரும் கட்டடத்தின் வேலைகள் பூர்த்தியாகியுள்ளபோதிலும் கூரைவேலைகள் முடித்துக்கொடுக்கப்படவில்லை.

இதனால், முன்பள்ளி மாணவர்களுக்கு வேண்டிய செயற்பாடுகளை உரியமுறையில் மேற்கொள்ளமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே, உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்திலெடுத்துச் சிறார்களின் அடிப்படைக் கல்வி வசதிகளைக் கருத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென முன்பள்ளிச் சமூகத்தினர் கேட்டுள்ளனர். (203-341)

## சுகாதாரச் செயற்பாடு

பரந்தன்,ஓக.2


தியாகதீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் சுகாதார செயற்பாட்டு நிகழ்வு நடத்தப்பட்டது.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை நிர்வாக சேவைப் பொறுப்பாளர் புலிமறவன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து திலீபனின் திருவுருவப் படத்திற்கு உதவி நிர்வாகப் பொறுப்பாளர் ஈகச்சுடரேற்ற மருத்துவப் போராளி சோபிதா மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து பாடசாலையில் 12 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கு உடற்பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சைகளும் வழங்கப்பட்டன.

அத்துடன், பாடசாலை ஆசிரியர்கள், உயர்வகுப்பு மாணவர்கள் ஆகியோருக்கு உடல், உள ஆரோக்கியம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தூட்டல்களும் வழங்கப்பட்டன. (203-352)



வவுனியா, வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபையினரால் 2006ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கான விளையாட்டு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன், வவுனியா பிரதேச சபைச் செயலர் சு.விஜயதாஸ் ஆகியோர் உரையாற்றுவதையும் சிறார்கள் விளையாட்டு நிகழ்வில் ஈடுபட ஆயத்தமாவதையும் படங்களில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சந்திரசேகரம்
**தில்லைநடேசன்**

[தர்மகர்த்தா, விடத்தற்பளை சம்பாவெளி வீரகத்தி விநாயகர், வேம்பிராய் சந்திரசேகரப் பிள்ளையார் தேவஸ்தானங்கள், பிலபல சோதிடர், பால பண்டிதர்]

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 07-11-1941 | 12-08-2005 |

குடும்பத்தின் ஜோதியாய் ஒளிர்ந்தீரே!
ஊர் உயர்ந்திட உதவினீரே!
தெய்வ பக்தியுடன் திருப்பணிகளும் செய்தீரே!
எம் தேவைகள் யாவையும் புரிந்தீரே!
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் பதைபதைக்க
விரைவினில் எமைவிட்டுப் பிரிந்தது தான் ஏனோ?
ஓடி மறைந்தது ஒரு வருடம் - கண்ணீர் மல்க
வாடி நிற்கிறோம் உம் நினைவால்.
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*விடத்தற்பளை,*
*மிருசுவில்.* (52387)(32-19-11)

மனைவி, பிள்ளைகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

## 12 ஆம் ஆண்டு நினைவலைகள்

ஆண்டவன் படைப்பு
12 - 03 - 1932



அநியாய அழிப்பு
14 - 08 - 1994

அமரர் **ஆறுமுகம் லோகேஸ்வரன்**

(இளைப்பாறிய ஆசிரியர், அச்சுவேலி ம.வி.)

திதி: 02-08-2006

அநியாய அழிப்பினாலே
அகாலமாய் போனவரே
ஆற்றிடயாருமின்றி அழுதழுது
ஆண்டுகள் பன்னிரண்டும் தேடுகின்றோம்.

*'வசந்த மாளிகை'*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

*தேடும் நெஞ்சங்கள்:*
மனைவி, மகள், மகன்,
மருமகன், மருமகள், பேரப்பிள்ளைகள்.

(52844)(21-32-19-11)

## நீங்காத 3ஆம் ஆண்டு நினைவுகளில்



திருமதி
**வேலாயுதம் தவமணி**

உதயம்
12-08-1955

மறைவு
05-08-2003


ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறாது உங்கள் பிரிவுத் துயர் அம்மா!
நாங்கள் பூமியில் வாழும் காலம் வரை
எமை விட்டகலாது எமது இதயச்சுமை அம்மா!
நீங்காத நினைவுகளாய் எம் நெஞ்சில் உங்கள் திருமுகம்
அணையாத ஒளிவிளக்காய் எம்முள்
உங்கள் அரசாட்சியும்
சரியாத கோபுரமாய் உங்கள்
வழிநடத்தலும் - என்றும்
மறையாதம்மா எம் நெஞ்சைவிட்டு அகலாது துன்பம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

*ராணி மில் ஒழுங்கை,*
*நெல்லியடி,*
*கரவெட்டி.*

*ஆறாத துயரினில் இன்றும் தவிக்கும்:*
கணவர் - வேலாயுதம்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(52814)(21-32-19-11)

## நினைவஞ்சலி

| இரண்டாம் வருடம் | | | நான்காம் வருடம் | | |
|---|---|---|---|---|---|
| தோற்றம் | | மறைவு | தோற்றம் | | மறைவு |
| 21 ★ 05 ★ 1926 |  | 13 ★ 07 ★ 2004 | 12 ★ 01 ★ 1926 |  | 02 ★ 08 ★ 2002 |

அமரர்
**Dr.பொன்னையா யோகலிங்கம்**

திருமதி
**றோசி ஜெயமணி யோகலிங்கம்**

*சிறு தளிராய் நின்ற எம்மை*
*பெரு விருட்சம் ஆக்கிவிட்டீர்- இன்று*
*எம்மை நோக விட்டுச் சென்று விட்டீர்*

*ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்*
*சென்றாலும்*
*அழியாது உங்கள் நினைவுகள்*

*'கோவிந்தவாசா',*
*பொற்பதி வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*

திருமதி வி.யோகவதனி (மகள்- லண்டன்),
மருமகன், பேரப்பிள்ளைகள் (லண்டன்).
(52849)(26-32-19-11)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
83,Palaly Road,
Kantharmadam, Jaffna.
Phone: 021 222 8093

யாழ்.பிரெஞ்சு நட்புறவுக் கழகம்
பிரெஞ்சு மொழி வகுப்புகள்
புதிய பிரிவு

கல்லூரி மாணவருக்கானதும் வேலை செய்வோருக்கானதும் மொழிபயிலும் ஆர்வமுள்ளோருக்கானதும் தொடக்க நிலை வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்திட்டம் இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் உதவியுடன் நடைபெறுகின்றது.

ஒரு வருடத்தில் சர்வதேச தரத்திலான பிரெஞ்சு மொழி பரீட்சைக்குத் தோற்ற முடியும்.
பதிவு செய்தலுக்கு நேரில் வரவும்
அல்லது தொலைபேசியில் தொடர்புகொள்ளவும்.
(52630)

## முன்பள்ளி விளையாட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஓக.2

ஆறுகால்மடம் அறிவொளி முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வண்ணை வைத்திலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அறிவொளி சனசமூக நிலையத் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்பள்ளிக் கல்வி அபிவிருத்தி வலயக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் பஞ்சலிங்கமும் கௌரவ விருந்தினராக யாழ்.லயன்ஸ் கழகத் தலைவர் அன்பானந்தனும் கலந்துகொள்வர்.
(203)

* * *

யாழ்ப்பாணம்,ஓக.2

உரும்பிராய் புனித மிக்கேல் சனசமூக நிலைய முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலைய முன்றிலில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளியின் பொறுப்பாளர் பி.விக்ரர் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீஸன் பிரதம விருந்தினராகவும் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு செபநேசரத்தினம் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வர்.
(204)

### ஆனைக்கோட்டையில் வீதிகள் திருத்தம்

நீண்ட காலமாக திருத்தப்படாமலிருந்த ஆனைக்கோட்டையிலுள்ள சிவன் வீதி, சக்கிராலை வீதி என்பன திருத்தியமைக்கப்படவுள்ளன.

இதற்கான கற்கள், மண் என்பன தற்போது அவ்வீதிகளில் குவிக்கப்பட்டு வருகின்றன. (204-100)

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
12 - 12 - 1957



அழிப்பு
02 - 08 - 1999

**அமரர் லயன் மார்க்கண்டு லோகேஸ்வரன்**

*(இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர், அஜந்தா போட்டோ - வீடியோ உரிமையாளர், நல்லூர் அரிமாக் கழக உறுப்பினர், சமூக - முன்னேற்றக் கழக சமாச பிராந்தியச் செயலாளர்)*

அன்பென்றும் அரவணைப்பென்றும்
பண்பென்றும் பண்பாடென்றும்
கல்வியென்றும் கட்டுப்பாடென்றும்
உன்னதமாய் நாம் வளர நல் அப்பாவாய்
இல்லற வாழ்வில் சிறந்த கணவனாய்
பொறுப்புகளைப் பங்கிடும் நல் உறவினனாய்
எம் நெஞ்சில் நீங்கள் இடம் பெற்றீர்கள்
நீங்கள் மறைந்து ஏழு வருடங்கள் ஆயினும்
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது.

*63, சங்கிலியன் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*
(52845)(32-11-19)

*உங்கள் பிரிவால் துயருறும்:*
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31ஆம் நாள் நினைவலையும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் சின்னத்தம்பி
**இராஜேந்திரன்**

[உரிமையாளர், 'நிஷாந்தன்' தொழிலகம், கே.கே.எஸ். வீதி, மல்லாகம்]

| அன்னையிடம் மகவாக | ஆண்டவனிடம் மலராக |
|---|---|
| 10-07-1950 | 03-07-2006 |

"அமுத கண்ணீர் காயமுன்னே
ஆறாத்துயர் தந்து அவசரமாய்
விரைந்தது
அவனடிக்கே சேரவென்றோ!"

எமது குடும்பத் தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு உடன்வந்து ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும் தொலைபேசி, கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் துயரைப் பகிர்ந்துகொண்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று (02.08.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'விக்ன பவனம்',*
*காளிகோயிலடி,*
*மல்லாகம்.* (52841)(32-11-19)

-குடும்பத்தினர்.

AHC

HealthNet TPO

**Announcement of job opportunity**

For a multi-national scientific research study, in collaboration with HealthNet TPO (Amsterdam, the Netherlands), on the effectiveness of a psychosocial intervention for children, Shanthiham is looking for qualified personnel.

**Minimum requirements**

* S/he is a Sri Lankan national from the same ethnic background as the research sample, proficient in Tamil and Engl[illegible]h (both spoken and written)
* S/he [illegible]as at least a Bachelors degree with provable research experience in a relevant discipline (Social Sciences [psychology, anthropology, sociology], Medicine)
* S/he has an affinity for working with children, excellent social skills and sensitivity
* Previous working experience in an NGO is an asset

Applicants are invited to send (a) CV's with a cover letter, (b) explaining motivation for the position and an explanation of how she/he fits the requirements, and (c) details of research carried out in the undergraduate period, in *both* written communication and by e-mail before August 7th to:

**Shanthiham**
V. Sankarappillai
Executive Director
1/8, Katpakavinayagar Lane
Kachcheri Nallur Rd.
Jaffna, Sri Lanka
E-mail: psych@sltnet.lk

**HealthNet TPO International**
Wietse Tol
International Research Coordinator
E-mail: wietsetol@gmail.com

(C/50579)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பின்வரும் கூற்றுகளில் கூறப்படும் கருத்துத் தவறானது. அது ஏன் தவறானது என்பதற்குரிய சரியான கூற்றைத் தெரிவு செய்க.

25. குருட்டு மனிதன் சத்தமாகப் பத்திரிகை வாசித்தான்.
1. குருட்டு மனிதனால் கல்வி கற்க முடியாது.
2. குருட்டு மனிதனால் பார்த்து வாசிக்க முடியாது.
3. குருட்டு மனிதனால் சத்தமிட முடியாது.

26. ஆல மரத்தின் கீழ் படுத்திருந்த வழிப்போக்கனின் தலையில் ஆலம்பழம் விழுந்ததில் பலத்த காயம் ஏற்பட்டது.
1. ஆலமரம் காய் காய்ப்பதில்லை.
2. ஆலமரத்தின் கீழ் படுத்துறங்க முடியாது.
3. ஆலமரத்தின் பழம் மிகவும் சிறியது.

★ 27 - 28 வரையான வினாக்களுக்காகத் தரப்பட்ட விடயங்களை நன்கு வாசித்து உரிய விடையைத் தெரிவு செய்க.

27. வழமை போல அன்றும் பிருந்தா பாடசாலைக்கு நேரத்தோடு வருகை தந்தி ருந்தாள். அவளுக்கு முன்னதாக புஷ்பா வந்தி ருந்தாலும், புஷ்பாவால் குமுதாவை முந்த முடியவில்லை. இதன் படி இவர்கள் மூவரும் அன்று பாடசாலைக்குச் சமுகமளித்த ஒழுங்கு

| | | |
|---|---|---|
| குமுதா<br>பிருந்தா<br>புஷ்பா | பிருந்தா<br>புஷ்பா<br>குமுதா | குமுதா<br>புஷ்பா<br>பிருந்தா |


ஒய்வு நேரப் பொழுதுபோக்குப் பற்றி ஐந்து நபர்களிடம் விவரம் கோரப் பட்டது.

சிவா வாசிப்பதோடு வீட்டுத்தோட்டம் செய்து கோழி வளர்க்கிறான். கியாஸூக்கு வாசிப்பில் விருப்பமில்லையாயினும் முத்திரை சேகரிக் கும் பழக்கத்தையும், பிராணி வளர்ப்பதையும் விரும்பிச் செய்கின்றான். சீலனுக்குத் தோட்ட வேலையிலும் பிராணி வளர்ப்பிலும் ஈடுபாடு கிடை யாது. வேலன் முத்திரை சேகரிப்பதோடு வாசிப்பதையும் பொழுதுபோக் காகக் கொண்டுள்ளான். மாதவனோ வாசிப்பதில் மட்டுமே ஈடுபாடு டையவன். இவர்களில்

28. வாசிப்பதற்கும், முத்திரை சேகரிப்பதற்கும் மட்டும் விருப்பு டையவர்கள் யாவர்?
1. சீலனும், வேலனும்
2. வேலனும், மாதவனும்
3. சிவாவும், சீலனும்


29. பிராணி வளர்ப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டவர் யாவர்?
1. சீலனும், சிவாவும்
2. சிவாவும், வேலனும்
3. சிவாவும், கியாஸூம்

★ இந்துவும் அவளது கணவனும் அவளது அம்மா, அப்பா, பாட்டன், பாட்டி, சித்தி, சித்தப்பா, தங்கை, தம்பி, மகன், மகள் ஆகியோருக் கிடையிலான உறவுத் தொடர்பு கோட்டுப் படத்தினால் காட்டப்பட்டுள் ளது.




30. இந்துவின் கணவரது மாமா மாமியாக இருக்கக்கூடியவர்கள் யார்?
1. X உம் Y உம் 2. E உம் F உம் 3. M உம் N உம்

31. G என்பவர் இந்துவுக்கு என்ன உறவாவார்?
1. சகோதரன் அல்லது சகோதரி
2. மாமா அல்லது மாமி
3. மைத்துனன் அல்லது மைத்துனி



32. இவ் உருவில் எத்தனை சதுரங்கள் உள்ளன.
1. 6 2. 7 3. 5

★ இல. 33 - 40 வரையிலான வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட் டின் மீது எழுதுக.

33. இப்போது நேரம் பி.ப. 1.30 மணியாகும். எனது கடிகாரம் உரிய நேரத்தை விட 10 நிமிடங்கள் குறைவாகவே நேரம் காட்டுகிறது. இன்னும் 1 மணி 15 நிமிடங்களில் எனது கடிகாரம் காட்டும் நேரம் என்ன?

.................................................................

34. உறையொன்றில் 60 பந்துகள் உள்ளன. அதில் 20 பந்துகள் மஞ்சள் நிறமுடையன. 12 பந்துகள் கருநிறமுடையன. கறுப்பும் மஞ்சளு மான பந்துகள் 8 உள்ளன. உறையினுள்ளே கறுப்பு, மஞ்சள் நிறங் களில் அமையாத பந்துகள் எத்தனை?

.................................................................

35. சுதாகருக்கு சுதாவைப் போன்று இரு மடங்கு கிடைக்குமாறு 480 ரூபா பணம் பகிரப்பட்டது எனின், சுதாகர் பெறும் பணம் எவ் வளவு?


.................................................................

36. அப்பா பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காகப் பலூன்கள் கொண்டு வந்தார். அவற்றில் தம்பிக்கு நீலம், பச்சை, வெள்ளை நிறங்களி லும், தங்கைக்கு மஞ்சள், பச்சை, நீல நிறங்களிலும் எனக்கு சிவப்பு, நீலம், பச்சை நிறங்களிலும் பலூன்கள் கிடைத்தன. எனக் கும் தம்பிக்கும் கிடைக்காத ஆனால் தங்கைக்குக் கிடைத்த பலூ னின் நிறம் என்ன?

.................................................................

37 - 38ஆம் வினாக்களுக்காக பின் வரும் உருவை அவதானிக்க.

37.




முக்கோணியில் இல்லாத ஆனால் சதுரத்திலும் வட்டத்திலும் இருக் கக் கூடிய எண் எது?


.................................................................

38. முக்கோணிக்கு உரித்தான எண்களுக்கும், சதுரத்துக்கு மட்டும் உரித்தான எண்களுக்கும் இடையிலான வித்தியாசம் எவ்வளவு?


.................................................................

★39 - 40 வினாக்களில் உள்ள உருக்களில் எண்கள் அமைந்துள்ள கோலத் தைக் கண்டு வெற்றிடத்துக்கு வரவேண்டிய எண்ணை எழுதுக.

39.




40.




[முற்றும்]

## அன்பு மாணவர்களே!

இலங்கையின் கல்வியில் தலைசிறந்து விளங்கும் மாவட்டங்களின் முன்னணி ஆசிரியர்களின் மாதிரி வினாத்தாளும், விடைகளும் உங்கள் பரீட்சை நலன்கருதி இங்கு வெளிவருகின்றன. அந்தவகையில் எதிர்வரும் வாரங்களிலும் தலைசிறந்த ஆசிரியர்களின் பரீட்சை எதிர்பார்ப்புடன் கூடிய வினாத்தாள்களும் வெளி வரவுள்ளன. அத்துடன், எமது கல்விச்சுடரினால் சிறந்த பரீட்சைப் பெறுபேறு களைத் தோற்று வித்துக்கொண்டிருக்கும் பிரபல ஆசிரியர்களின் மாதிரி வினாத் தாள்களும் எதிர்வரும் காலங்களிலும் இப்பகுதியில் பிரசுரிக்கப்பட வுள்ளன. பரீட்சை நடைபெறும் திகதி வரை எம்மால் வெளியிடப்படும் பல வினாத் தாள்களில் பல ஆசிரியர்களின் வேறுபட்ட வினா "வியூகங்கள்" அமைந்திருப்ப தால் இப்பகுதியில் வெளிவரும் வினாக்களில் பெரும்பாலானவை இறுதி அரசபரீட்சைகளின் வினாக் களாக வெளிவரும் என்பதில் கல்விச்சுடர் நம்பிக்கை கொண்டுள்ளது. எனவே மாணவர்களே! உங்கள் சிறந்த பெறுபேறுகளுக்காகக் கல்விச்சுடருடன் இணைந்திருங்கள்.

**கல்விச்சுடரில் வெளிவரும் வினாக்களிலும், விடைகளிலும் ஏதாவது தவறுகள் அல்லது சந்தேகங்கள், விளக்கமின்மைகள் ஏற்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டால் அல்லது விலாசத்திற்கு எழுதி அனுப்பினால் உரிய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.**

தொ.பே. இல. 0714-273035, 0714-220008
கல்விச்சுடர்
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழாய்மூலம் குடிதண்ணீர் வழங்குமாறு கோரிக்கை

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயக் கிணற்றிலிருந்து குழாய் மூலம் குடி தண்ணீர் பெற வசதிசெய்து தருமாறு அப்பகுதிப் பொதுமக்கள் பொது அமைப்புகளிடம் வேண்டுகோள்விடுத்து வருகின்றனர். அப்பகுதியிலுள்ள கிணறுகள் பலவும் உவராக மாறி ருகின்றன. ஆகையால் மூத்த நயினார் ஆலயக் கிணற்றிலிருந்தே பலரும் குடிதண்ணீர் பெற்று வருகின்றனர். இக்கிணற்றில் தண்ணீர் எடுக்க நீண்டநேரம் காத்திருக்கவேண்டியிருப்பதால், குழாய் மூலம் கிணற்றிலிருந்து தண்ணீர்பெற உதவுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (100)

## சிறுவர் தினப் போட்டி முடிவுகள்

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி பருத்தித்துறை பிரதேச செயலக அனுசரணையுடன் வடமராட்சி கல்வி வலயத்தினர் பருத்தித்துறை கல்விக்கோட்டப் பாடசாலை மாணவர்ககளிடையே சிறுவர் தினப்பேச்சுப் போட்டிகளை அண்மையில் வட இந்து மகளிர் கல்லூரியில் நடத்தினர்.

இப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

1ஆம் இடம்-கனகசிங்கம் சிவசுதன் (ஹாட்லிக் கல்லூரி)

2ஆம் இடம்-பாலச்சந்திரன் தர்மினி (வட இந்து மகளிர் கல்லூரி)

3ஆம் இடம்- பாலசுப்பிரமணியம் மதுஷா (மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)

இவர்களுக்கான பரிசில்கள் பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் சிறுவர் தின விழாவில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (117)


# COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777 222422

**யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்.**

## Diploma in Hardware Engineering

உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை பெற சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப் பெற.

**Course Contents :-**
- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & DOS
- கம்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்
- Mother Board, processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்.
- கம்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம். (BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்.
- Software, Operating system இன்ஸ்ரோல் செய்தல்.
- கம்யூட்டரில் ஏற்படும் பழுதுகளை சரிபார்த்தல்.

**Hardware பயிற்சி.**
- கணனிப் பாகங்களை இனம்காணும் முறை.
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Network தொடர்பான அறிமுகம்
- Trouble Shooting & Maintenance.

**Software பயிற்சி.**
- Operating System நிறுவும் முறை (Windows 98 & Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை. (Sound Card, Modem, VGA, TV Card, Printer )
- Trouble Shooting (File updating, Copying)

Course Fee :- 2000/=
Free Study Pack & Driver CD
வகுப்புக்கள் ஆரம்பம் :-
07/08/2006 :- 08.30

## Diploma in Computerized Accounting

**ACCPAC + Quickbooks premier + MYOB**

ஆகிய முன்னணி Accounting Software அனைத்ினூடாகவும் கற்பிக்கப்படும்.

One week

***Course Contents:-***
Introduction to Computer
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore casting
Business Planing
Internet & e-mail

யாருக்கு:-
கணக்கியல் துறையில் (அரச,தனியார்,NGO) வேலைசெய்துகொண்டிருப்போருக்கும், வெளிநாட்டில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கும், பல்கலைக்கழக, உயர்தொழினுட்ப கல்லூரி மாணவர்களிற்கும், கணக்கியல் துறையில் கற்றுக்கொண்டிருப்போர் அனைவரிற்கும்.

Course Fee:-
~~17500~~ 3500

**கற்கைநெறியின் நன்மைகள் :-**
- பாடநெறியின் இறுதியில் 100% பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்
- கம்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்யூட்டர் தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

வகுப்புக்கள் ஆரம்பம்:-
07/08/2006


## 90ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் பாலசந்திரன் கிரிகாந்தன் *(கிரி)*

| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 10-10-1988 | 04-05-2006 |

*பத்து மாதம் சுமந்து பெற்ற*
*தாய் துடிக்கின்றாள்*
*உன்னுடன் உடன் பிறவா*
*சகோதரர் பரிதவிக்கின்றோம்*
*எங்கு நீ சென்றாய்.*

இராஜகிராமம்,
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
(52839)(26.45.15)

உன் நினைவில்
உடன் பிறவாச் சகோதரி:
கு.பிறந்தினி,
கரவெட்டி வடக்கு.

## 31ஆம் நாள் நினைவலைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

தோற்றம் 30 . 11 . 1984



மறைவு 03 . 07 . 2006

### அமரர் தேவராசா பிரதீபன் *(கனடா)*

நாள்களோடினவே பிரதீபா - உந்தன்
நினைவலைகள் ஓயலையே
இடியோடு வந்த செய்தி-
அடியோடு பொய்த்துப் போகாதோ
எனதினந்தினம் ஏங்கித் தவிக்கிறோமே எம்
செல்வமே...!

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் எம் செல்வத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

சோடாக்கொம்பனி ஒழுங்கை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

-குடும்பத்தினர்.
(52813)(26.15.45)

## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை, மல்லாகம்
## மீள் கேள்வி அறிவித்தல் - 2006

கீழ்க்குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம் 'எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்த காரர்களிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் கடைசித்திகதி :-08.08.2006 செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிவரை

கேள்விகள் ஏற்கப்படும் இறுதித்திகதி :-11.08.2006 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :-11.08.2006 வெள்ளிக்கிழமை பி.ப.2 மணிவரை

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை *"செயலாளர், வலி.வடக்கு பிரதேசசபை, மல்லாகம்."* என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்."* என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம்(வற் உட்பட) |
|---|---|---|---|
| 01 | அலுக்கை வீதி புனரமைப்பு, அளவெட்டி. | 15000/- | 575/- |
| 02 | கூத்தன்சீமாச் சந்தை, கிணறு அமைத்தல், பன்னாலை | 3000/- | 575/- |
| 03 | கூத்தன்சீமாச் சந்தை, மலசல கூடம் அமைத்தல், பன்னாலை. | 1500/- | 575/- |

இது தொடர்பான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
காங்கேசன்துறை, மல்லாகம்.
*02-08-2006*

திருமதி ஸ்ரீரஞ்சிதமலர் மாணிக்கம்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்.

*(சி/52601)(26.45.15)*

## நீங்காத நினைவலைகள்

*இரண்டாம் ஆண்டு* | *இருபத்தைந்தாம் ஆண்டு*



### திருமதி மகேஸ்வரி அம்பலவாணர்

*(திதி: அட்டமி)*

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12★02★1928 | 25★07★2004 |

எம்முடன் வாழ்ந்து எம்
அனைவரையும்
அரவணைத்து வழிநடத்திய
எமது அன்புத் தெய்வமே!



### திருமதி அ.கமலாதேவி B.A.(Hons)

[முன்னாள் அபிவிருத்தி உத்தியோகத்தர்]

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03★01★1948 | 15★04★1981 |

அன்பின் திருவுருவாய் அணையா ஒளி
விளக்காய்
விஞ்சும் பெரு நிலவாய் வழிகாட்டிய
தெய்வமே!
ஆண்டுகள் பல சென்றாலும் ஆறாது
எம்துயர்.

*(52846)*
*(26.45.15)*

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

'அக்கா அகம்', இணுவில் மேற்கு.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்தநாள் பரிசாக 2 கோடி ரூபா பெற்றார்; ஜெயலலிதாவுக்கு எதிராகக் குற்றப்பத்திரம்

## இந்திய மத்திய புலனாய்வுத்துறை தாக்கல் செய்தது



சென்னை,ஒக.2

பிறந்தநாள் பரிசாக இரண்டு கோடி ரூபா பெற்றதாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீது மத்திய புலனாய்வுத்துறை குற்றப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது.

சென்னையில் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் மத்திய புலனாய்வுத் துறையின் மேலதிக அத்தியட்சகர் ரகுமார், வழக்கறிஞர் ஜேக்கப் டானியல் ஆகியோர் 2000 பக்கங்கள் அடங்கிய குற்றப்பத்திரத்தை கடந்த திங்கட்கிழமை மாலை தாக்கல் செய்தனர். பரிசுத் தொகையை 'டிமாண்ட்' வரைவு மூலமாக ஜெயலலிதாவுக்கு அனுப்ப ஏற்பாடு செய்ததாக முன்னாள் அமைச்சர்கள் செங்கோட்டையன், அழகு திருநாவுக்கரசு ஆகியோர் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. குற்றப்பத்திரத்தில் மேலும் கூறியிருப்பதாவது:-

1992ஆம் ஆண்டு தமிழக முதல்வராக ஜெயலலிதா இருந்தபோது அவரது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு வங்கிகள் மூலமாக இரண்டு கோடி ரூபாவுக்கான 89 'டிமாண்ட்' வரைவுகள் ஜெயலலிதாவுக்கு அனுப்பப்பட்டன. 57 பேர் அனுப்பிய அந்த வரைவுகளைப் பணமாக்கி சென்னையில் உள்ள கனரா வங்கியில் தனது பெயரில் ஜெயலலிதா போட்டுக் கொண்டார். இது தவிர மேலும் 15 லட்சம் ரூபா ரொக்கமாகவும் அவருக்கு வழங்கப்பட்டன. இதையும் அவர் தன் பெயரில் வங்கியில் வைப்புச் செய்தார்.

இந்தத் தொகை எல்லாம் தனக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டவை என்று வருமான வரிக் கணக்கில் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து வருமான வரித்துறை இயக்குநர் கொடுத்த முறைப்பாட்டை 1996ஆம் ஆண்டு பதிவுசெய்து, புலனாய்வுத்துறை விசாரித்தது. ஜெயலலிதா முதல்வராக இருந்த போது அமைச்சர்களாக இருந்த கே.ஏ.செங்கோட்டையன், அழகு திருநாவுக்கரசு ஆகியோர் 'டிமாண்ட்' வரைவு மூலமாக ஜெயலலிதாவுக்கு நன்கொடை அனுப்ப ஏற்பாடு செய்தனர் என்று புலனாய்வுத்துறையின் விசாரணையில் தெரியவந்தது.

ஊழல் தடுப்புச் சட்டம் 11 ஆவது பிரிவின் கீழ் ஜெயலலிதா மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. அரசுப் பதவியில் இருப்பவர் தன்னுடன் அரசு முறையில் பணியாற்றுபவரிடம் இருந்து ரொக்கப்பணத்தையோ, விலைமதிப்புள்ள பொருளையோ பரிசாகப் பெற்றால் அது குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக இருந்தால் அந்தத் தொகை அல்லது பரிசுப் பொருளை அரச திறைசேரியில் ஒப்படைக்க வேண்டும் என்று ஊழல் தடுப்புச் சட்டத்தின் 11 ஆவது பிரிவு கூறுகின்றது. ஆனால் ஜெயலலிதா தனக்குப் பரிசாக வந்த பெரும் தொகையை தனது பெயரில் வங்கியில் வைப்புச்செய்தது குற்றம் ஆகும்.

இக்குற்றத்துக்கு உடந்தையாக இருப்பவர் மீது நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் 12 ஆவது பிரிவு வகை செய்கிறது. செங்கோட்டையனும் அழகு திருநாவுக்கரசும் உடந்தையாக இருந்ததால் இப்பிரிவின் கீழ் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் 149 பேர் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். ஆதாரங்களாக 285 ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மத்திய புலனாய்வுத்துறை, நீதிமன்ற நீதிபதி மீனாட்சி சுந்தரம் இக்குற்றப் பத்திரத்தை படித்துப் பார்த்த பிறகு நீதிமன்றில் ஆஜராகுமாறு ஜெயலலிதாவுக்கும் மற்றவர்களுக்கும் கட்டளை அனுப்புவார்.

சட்டசபை உறுப்பினராக ஜெயலலிதா இருப்பதால் அவர் மீது இவ்வழக்கில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய சட்டப் பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன் சி.பி.ஐக்கு அனுமதி வழங்கியுள்ளார். (8)

## சீனாவில் 18 ஆயிரம் இராணுவப் பள்ளிகள்

சீனாவில் இளைஞர்களுக்காகக் கடந்த 10 ஆண்டுகளில் 18 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் தேசிய பாதுகாப்புக் கல்வி மற்றும் நாட்டுப்பற்று ஊக்குவிப்பிற்காக 2 கோடி இளைஞர்கள் ஆண்டு தோறும் கல்வி பயில்கின்றனர்.

மேலும், இப்பள்ளிகள் மூலம் கோடைகால முகாம்கள், உடற்பயிற்சி மற்றும் இராணுவத்திறன் போட்டிகள் ஆகியவை நடத்தப்படுகின்றன. சீனாவில் ஆளும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் பிரிவான சீனக் கம்யூனிஸ்ட் இளைஞர் கூட்டுறவு அமைப்பு இப்பள்ளிகளை நடத்தி வருகிறது. (8)

# இலங்கையில் போர் மூண்டால் புலிகளுக்குப் பலமாக இருப்போம்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உரை



திருவொற்றியூர்,ஒக.2

இலங்கையில் போர் மூளும் பட்சத்தில் விடுதலைப் புலிகளுக்குப் பக்கபலமாக இருப்போம் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

சென்னை ராயபுரத்தில் வடசென்னை ம.தி.மு.க. சார்பில் மறுமலர்ச்சி இரத்ததானக் கழகத் தொடக்கவிழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

அதில் அவர் பேசியதாவது:-

இலங்கையில் தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காக விடுதலைப் புலிகள் போராடி வருகிற நிலையில், தற்போது அங்கு மீண்டும் போர் மூளும் சூழல் ஏற்பட்டுள்ளது.

போர் மூணடால் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் தாய்த் தமிழகத்தையே திரட்டுவோம்.

சட்டப்பேரவையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா இந்த அரசை சிறுபான்மை அரசு என்றதை முதல்வர் கருணாநிதியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. இது ஒன்றும் கூட்டணி ஆட்சி அல்ல. தி.மு.க. 95 சட்டசபை உறுப்பினர்களைக் கொண்டு ஆட்சி அமைத்துள்ளது.

டில்லியில் 15 எம்.பிக்களைக் வைத்துக் கொண்டு 7 அமைச்சர்களை தி.மு.க. பெற்றுள்ளது. தமிழகத்தில் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளை அழைத்துக் கூட்டணி ஆட்சி அமைத்திருக்க வேண்டும். தி.மு.க. தங்களை மோசம் செய்துவிட்டதாகத் தற்போது அக் கட்சியினர் புலம்புகின்றனர் என்றார் - வைகோ. (8)

# தெற்கு ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு பொறுப்பை நேட்டோ படை ஏற்றது

காபூல்,ஒக.2

தெற்கு ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் பொறுப்பை அமெரிக்கா தலைமையிலான படையிடமிருந்து 'நேட்டோ' படை கடந்த திங் கட்கிழமை பொறுப்பேற்றுக்கொண்டது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் அரசு ஒஸாமா பின்லேடனுக்கு அளித்த அடைக்கலத்தை அடுத்து நடைபெற்ற சண்டையையடுத்து 5 ஆண்டுகளுக்கு முன்னதாக தெற்கு ஆப்கானிஸ்தான் பாதுகாப்புப் பொறுப்பை அமெரிக்கா தலைமையிலான படைகள் ஏற்றன.

'நேட்டோ' படையில் பிரிட்டிஷ், கனடா துருப்புகள் பெருமளவில் இடம்பெற்றுள்ளன. அமெரிக்கப் படை வீரர்களும் குறைந்தளவில் இடம்பெற்றுள்ளனர். இப்படையின் தலைவராக பிரிட்டிஷ் லெப்டினன்ட் ஜெனரல் ஜான் டேவிட் ரிச்சர்ட்ஸ் இருப்பார். அமெரிக்கா தலைமையிலான படைகள் இது வரை பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வந்தன. இப்போது அந்தப் பொறுப்பை 'நேட்டோ' படை ஏற்கிறது. (8)




# ஹிஸ்புல்லா தீவிரவாதிகளை ஈரான் அரசு ஊக்குவிக்கிறது

## இஸ்ரேல் குற்றச்சாட்டு

ஜெருசலேம்,ஒக.2

ஹிஸ்புல்லாத் தீவிரவாதிகளுக்கு ஈரான் ஆதரவளித்து வருவதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் அமிர் பெரிட்ச் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் அவர் பேசுகையில், நாங்கள் ஹிஸ்புல்லாத் தீவிரவாதிகளுக்கு எதிராகப் போராடி வருகிறோம். ஆனால், ஈரான் அவர்களுக்குப் பண உதவி செய்து அவர்களை மேலும் வலுப்படுத்தி தீவிரவாத செயல்களுக்காக முன்னிறுத்துகிறது.

தெற்கு லெபனான் பகுதியில் ஹிஸ்புல்லாத் தீவிரவாதிகள் செயலை ஒடுக்க லெபனான் அரசு தவறிவிட்டது - என்றார் அவர். (8)

# தீவிரவாதத்தை முறியடிப்பதற்கு 'சார்க்' நாடுகள் உதவவேண்டும்

## இந்தியா கோரிக்கை

டாக்கா,ஒக.2

''எல்லை தாண்டிய தீவிரவாதத்தை முறியடிக்க பாகிஸ்தான் உள்ளிட்ட 'சார்க்' உறுப்பு நாடுகள் தீவிரமான ஒத்துழைப்பைத் தர வேண்டும்'' - என இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் வலியுறுத்தினார்.

'சார்க்' உறுப்பு நாடுகளின் வெளியுறவு செயலர்கள் மட்டத்திலான ஆலோசனைக் கூட்டம் பங்களாதேஷின் டாக்காவில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் கலந்துகொண்ட இந்திய வெளியுறவுச் செயலர் ஷியாம் சரண் பேசும்போது,

''ஜூலை 11ஆம் திகதி தீவிரவாதிகளால் மும்பை புறநகர் ரயில்களில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவம், தீவிரவாதத்தை அடியோடு அழிக்க வேண்டியதன் அவசியத்தை அனைத்து நாடுகளுக்கும் உணர்த்தியுள்ளது. எனவே, எல்லை தாண்டிய தீவிரவாதத்தை அடியோடு வேரறுக்க, பாகிஸ்தான் உட்பட 'சார்க்' அமைப்பில் இருக்கும் அனைத்து உறுப்பு நாடுகளும் தீவிர ஒத்துழைப்புத் தரவேண்டும். தீவிரவாதம் நாட்டை அச்சுறுத்தும் சக்தியாகவுள்ளது. இதனைக் கட்டுப்படுத்திக் களைய வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது'' - என்றார். இதற்குப் பதிலளித்த பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் ரியாஸ் முகமதுகான் கூறுகையில்,

''தீவிரவாதத்திற்கு எதிராகப் பாகிஸ்தான் ஏற்கனவே பிரசாரம் நடத்தி வருகிறது'' - என்றார். (8)

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T: 021 222 6242
021 2223984
Fax: 021 222 5600
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri. T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying
யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு கொடியில் உதிர்ந்த மலர்கள்

20 வருடம் 20 வருடம் 31 ஆம் நாள்



சதாசிவம் சிவானந்தமூர்த்தி

அன்னையின் மடியில் 04-05-1953
தரணியின் மடியில் 05-06-1986



விநாயகமூர்த்தி சதாசிவம்
(இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர்)

அன்னையின் மடியில் 04-05-1953
தரணியின் மடியில் 11-03-1986



சதாசிவம் சிவபாஸ்கரன்

அன்னையின் மடியில் 28-04-1962
தரணியின் மடியில் 03-07-2006

குல விளக்குகளே! நீங்கள் அணைந்தீர்கள்
குமுறுகின்றோம் உங்கள் நினைவால்
வேரோடு மரம் புரண்டு
வீதியிலே வீழ்ந்தது போல
பாழும் வீதியிலே எம்மை விட்டு
பாதியிலே சென்று விட்டீர்கள்!
மின்னலென நீங்கள் மறைந்து
விண்ணுலகம் சென்றிடினும்
உங்கள் உறவை மறப்போமா
மறக்கும் நெஞ்சம் உண்டோ?

மூத்தாம்பியார் வளவு, வதிரி, கரவெட்டி.

இவர்களின் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர், உறவினர்.

(52863)(39)

## மரண அறிவித்தல்

### அருளம்பலம் சேனாதிராசா

யாழ்ப்பாணம் கல்லூரி வீதி, நீராவியடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், தற்போது 14-3A டிக்மன்ஸ் கோட், டிக்மன்ஸ் வீதியில் வசித்தவருமான அருளம்பலம் சேனாதிராசா 31.07.2006 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காயத்திரியின் பாசமிகு கணவரும், கீதா (சிட்னி), கிருஷ்ணன் (கிஷோ- (Computer Point Colombo) ஆகியோரின் அன்புத் தந்தையும், கங்காதரனின் (சிட்னி) அன்பு மாமனும், திலகவதி யோகநாதன், அம்பலவாணர், காலஞ்சென்ற ஞானசம்பந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அஞ்சனாவின் (சிட்னி) அருமைப் பாட்டனும், காலஞ்சென்ற அருளம்பலம் தம்பதியரின் பாசமிகு புத்திரனும் காலஞ்சென்ற மறவன்புலோ பொன்னம்பலம் தம்பதியரின் அன்பு மருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2006) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.


தொலைபேசி
0112554793
கொழும்பு.

(52864)(21.15.45)

# மரண அறிவித்தல்

## காசிப்பிள்ளை இராஜரட்ணம்

(முன்னாள் மதுவரித் திணைக்கள அத்தியட்சகர்)
(RETIRED SUPERINTENDANT OF EXCISE JAFFNA)



இல.101, கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை இராஜரட்ணம் 30.07.2006 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் காசிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற புகையிரத நிலைய அதிபர் கந்தையா- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், நல்லூர் மூத்தவிநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தா சபைத் தலைவரும் சமாதான நீதவானும், தவமணியின் அன்புக் கணவரும் நிரஞ்சனி (Germany), இராஜகுமாரன் (U.K.) சூரியகுமாரன் (U.K.) கமலினி (சுமதி - Canada) ஆகியோரின் அன்புத் தந்தையும், துரைரட்ணம் (Germany), மோகனா (U.K.), காயத்திரி(சூட்டி - U.K.), ரவீந்திரன் (Canada), ஆகியோரின் அன்பு மாமனும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற செல்வரத்தினம், யோகரத்தினம், சகுந்தலாதேவி (Canada) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நடராஜன், விஜயலட்சுமி, திருக்குமாரன் (Dubai) ஆகியோரின் மைத்துனரும், நிரோஷ் (Germany), திலக்ஷன் (Germany), மாளவி (U.K.), துளசி (U.K.), அஞ்சலி (U.K.), ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (03.08.2006) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜகுமாரன் (மகன்).

101, கச்சேரி நல்லூர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 222 7022

(52863)(21.15.45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6732596 முதல் 6742840 வரை. சீட்டிழுப்பு இல. 258 திகதி 31-07-2006

### வெற்றி எண்கள்

**4 8 5 4 7 7** சுப்பர் எண் **15**

ஜக்பொட் பரிசு ரூ. **14,550,625/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | 0 | 14,550,625/= | - |
| இடது பக்கமிருந்து முதல் 6 எண்கள் | 01 | 1,000,000/= | 1,000,000/- |
| இடது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 50,000/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 89 | 5,000/= | 445,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 900 | 500/= | 450,000/= |
| இடது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8991 | 50/= | 449,550/= |
| இடது பக்கமிருந்து முதல் 1 எண் | 89099 | 10/= | 890,990/= |
| வலது பக்கமிருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/= | 45,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 4 எண்கள் | 90 | 1,000/= | 90,000/= |
| வலது பக்கமிருந்து முதல் 3 எண்கள் | 896 | 100/= | 89,600/= |
| வலது பக்கமிருந்து முதல் 2 எண்கள் | 8922 | 20/= | 178,440/= |
| | | மொத்தம் ரூ. | 4,088,580/= |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 66,125/= | 529,000/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **4,617,580/-**

ரூ. 66,125/- பெறுமதியான 8 மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாந்தோட்டை | 6735330-7-61 |
| கண்டி | 6739664-5-57 |
| காலி | 6735158-8-57 |
| மாத்தளை | 6741044-7-68 |
| புத்தளம் | 6741629-1-31 |
| அநுராதபுரம் | 6740440-8-61 |
| பொலனறுவை | 6733439-7-63 |
| மொணராகலை | 6740207-3-47 |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. **14,800,625/-**

தொடர் இல. 7645658 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2006 ஆகஸ்ட் 03 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.


## நீங்காது நின்றொளிரும் 26 ஆண்டுகள்...



மலர்வு 14 * 11 * 1935

உதிர்வு 02 * 08 * 1980

### அமரர் சுவாம்பிள்ளை யோசவ் அன்ரன்

(பொலிஸ் சார்ஜன் - மாதகல்)

*நீண்டதொரு நாள்கள் நெருங்கிக்கடந்தாலும்*
*எங்கள் உயிரோடு உயிராகக் கலந்துவிட்ட*
*உங்கள் அன்பும் நினைவுகளும் வழிநடத்தல்களும்*
*என்றும் எங்களுடனிருக்கும்.*

**அன்பு மனைவி, மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

த.முகவரி: நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (52858) (24-18-12-49)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 . 09 . 1943

மறைவு 25 . 07 . 2004

### அமரர் ஆசீர்வாதம் அருள்நாயகம்

*எமது அன்புறவே, எம் உடன் பிறப்பே, என்றும் எம் நினைவில் உலவிவரும் தங்கள் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி என வழிபாட்டுக் கிரியைகள் வந்ததும் நெஞ்சம் தங்கள் பிரிவை உணர்கிறது. உங்கள் ஆன்மா இறைவன் நிழலில் சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி! (52860) (18-12-49)

துன்னாலை வடக்கு, கரவெட்டி.

**குடும்பத்தினர், சகோதரர்கள்.**

## வேலையாள்கள் தேவை

உணவகத்திற்கு சமையலாளர், ரீ மேக்கர், றொட்டி தயாரிப்பாளர்கள் உடன் தேவை. தங்குமிட வசதி உண்டு.

**தொடர்பு: லிங்கம் கபே**
**தேசிய சேமிப்பு வங்கி முன்பாக**
**கண்டிவீதி, சாவகச்சேரி.** (சி-50611)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

கலைப்பீட, முகாமைத்துவ, வணிகபீட இறுதிவருட மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் **IRQUE** நிகழ்ச்சித் திட்டம்.

05.08.2006. அன்று ஆரம்பமாக விருந்த மேற்படி வகுப்புகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

புதிய திகதி பின்னர் பத்திரிகை வாயிலாக அறியத்தரப்படும்.

**IRQUE Project**
**University of Jaffna**
**2006.08.01** (சி-50617) **Director.**

## வலி. கிழக்கு பிரதேசசபை- புத்தூர் கேள்வி அறிவித்தல் -2006 கால நீடிப்பு

23.07.2006 ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்படி விளம்பரம் கீழ்க் குறிப்பிட்ட திகதிகளுக்கு கால நீடிப்புச் செய்யப்படுகிறது.

**கேள்விப் பத்திரம்வழங்கப்படும் திகதி :**
10.08.2006 பி.ப. 3 மணி வரை

**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்திகதி :**
11.08.2006 பி.ப. 1 மணிவரை

**கேள்விகள் திறந்துபரிசீலிக்கப்படும் திகதி:**
11.08.2006 பி.ப. 2 மணி

(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் போது கேள்விப் பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)

மேலதிக விவரங்களைஅலுவலக நேரத்தில் தலைமைஅலுவலகத்தில் பெற்றக்கொள்ளலாம்.

தம்பையா நடராசா
செயலாளர்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
புத்தூர்.
01.08.2006 (சி-50620)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



### தவராசா சுகந்தன்

(காசாளர், வல்வெட்டித்துறை நகரசபை)

தோற்றம் 28-05-1978 — மறைவு 13-08-2005

உன் கண்ணீர் என் கண்களில்
என் புன்னகை உன் உதடுகளில்
உயிரினில் கலந்திட்டதோழா
நீயின்றி சோர்ந்ததடா என் தோள்கள்
துடிப்பெடுக்க மறுக்கிறது என் சுவாசம்
நீயின்றிகிடைத்திடுமோ சுகந்த வாசம்

(52866) (18-12-49) **உன் நினைவுகளோடு நண்பர்கள்**
கொக்குவில். **ஐங்கரன், கஜீதன்.**


## ராஜா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம்ரவி, திரிஷா, தேஜாஸ்ரீ, ரிச்சாட்பட்டேல்

**சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்**

காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-47139)

## நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்

இன்று முதல் அர்ஜுன், சினேகா, கபாலி நடித்த

**சின்னா** (அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க)

காட்சிநேரம் : 10.30, 2.30



வசீகர தோற்றத்திற்கு

# சந்தனாலேப



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)

வெண்சந்தனம், மரமஞ்சள், தங்கமப் பட்டை, கஸ்தூரி, மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔஷதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், பாத்தாமரை, கண்ணைச் சுற்றி கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவுபடுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

*யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்*
**'சிவா நறுமணப் பூங்கா'**
*288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.*
T.Phone: 222 2567

*சகல பார்மஸிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.*

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REGNO A/L 250


## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி



*திருமதி* **றொனசறோ விக்டோரியா** (றூலி)

மண்ணகம் *12-04-1977* — விண்ணகம் *03-07-2006*

''உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பிலும் வாழ்வான்''

இவரின் பிரிவால் துயருறும்:
கணவன், மகன், தாய்,
சகோதரர்கள்.

*இல.136, பாங்சால் வீதி, யாழ்ப்பாணம்.* (52873) (18-12-49)

## ஓராண்டு நினைவஞ்சலி



### அமரர் தவராசா சுகந்தன்

(முன்னாள் காசாளர், நகராட்சி மன்றம்,வல்வெட்டித்துறை)

*எம் அன்பு நண்ப.....சுகந்தா!*
*முன்னையோ பின்னையோ - நாமும்*
*உன் பின் வர தயார் நிலையில்....!*
*வாழ்ந்தவன் வீழ்வதும்*
*வீழ்ந்தவன் வாழ்வதும்*
*கால சக்கரத்தின் சுழற்சி - ஆனால்*
*மாண்டவன் மீள்வதில்லை.*
*இன்றும் நீ எம்முடன் வாழ்கின்றாய்.*
*அன்றும் இன்றும் என்றும்*
*உன்னுடன் பழகிய அந்த -*
*நினைவழியா நாள்கள் - என்றும்*
*பசுமையாய் எம் மனதில் நிலைத்திருக்கும்.*
*உன் ஆத்மசாந்திக்காக*
*எல்லாம் வல்ல இறைவனை வேண்டும்.*

மலர்வு 28 05 1978

உதிர்வு 13 08 2005

செயலாளரும்,
சக உத்தியோகத்தர்கள்,
ஊழியர்களும்.

*நகராட்சி மன்ற அலுவலகம், வல்வெட்டித்துறை.* (52867) (18-12-49)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் பொன்னம்பலம்(சின்னையா)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்னம்பலம் (சின்னையா) நேற்று (01.08.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியம் - பொன்னம்மா தம்பதியரின் மகனும் நேசரத்தினத்தின் (வேவி) கணவரும் பாலசுப்பிரமணியம் (அம்மா புத்தகசாலை), புஸ்பராணி, கமலாதேவி, புஸ்பலீலா, கதிர்காமநாதன் (ஜேர்மனி), கணேசலிங்கம்(லண்டன்)ஆகியோரின் தந்தையும் சுபத்திராதேவி, தயாளன், ஆனந்தகுமார் (வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ. கூ. சங்கம்), சதீஸ்குமார் ஆகியோரின் மாமனும் ஷர்மிகா, கிருஷன், கிருஷிகா, விதுஷிகா ஆகியோரின்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (02.08.2006) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தாவடி இந்து மயானத்திற்குஎடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு, சுதுமலை.* (52875) (18-12-49)

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி பராசக்தி சின்னையா

**(தோலகட்டி - வசாவிளான்)**

தோலகட்டி, வசாவிளானை பிறப்பிடமாகவும் மதீனா வீதி, பூந்தோட்டம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சின்னையா 30.07.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியலிங்கம் - நாகம்மா தம்பதியரின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்ற சின்னையா (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராஜா, கனகசபை ஆகியோரின் சகோதரியும் சிவபாக்கிம், கண்மணி ஆகியோரின் மைத்துனியும் ரஜனி, காலஞ்சென்ற ஜெயக்குமார், தேவகுமார், நந்தினி, பாமினி, வதனகுமார், சாந்தகுமார் ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்ற பாலச்சந்திரன், தேவராணி, திருஞானசம்பந்தர், உருத்திரச்சந்திரன், குமாரநந்தினி, சுகுணரஞ்சிஆகியோரின் அன்பு மாமியும் பாலமதி, காலஞ்சென்ற பாலச்செந்தூரன், பாலேசன், தேனுகா, தேவிகா, தேனுசன், கிசோபன்,மோகீசன், வர்ணிகா, மதுசன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பசீலன் வீதி, 3ஆம் வட்டாரம் முள்ளியவளையிலுள்ளஅவரின் மகனின் இல்லத்தில் இன்று (02.08.2006) புதன்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு முள்ளியவளை கற்பூரப்புல் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பசீலன் வீதி, 3ஆம் வட்டாரம், முள்ளியவளை.* (சி-50616) (18-12-49)

**தகவல்: சி.தேவகுமார் (தேவா).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலின் தாக்குதல் மேலும் தீவிரமாகும் யுத்த நிறுத்தத்திற்கான வாய்ப்பே இல்லை

## எச்சரிக்கிறார் அந்நாட்டு பிரதமர்

பெய்ரூட், ஓகஸ்ட் 02

எமக்கும் லெபனானுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் ஏற்பட வாய்ப்பு குறைவாகவே உள்ளது. இருப்பினும், எமது தாக்குதல்கள் தொடரும் என இஸ்ரேல் பிரதமர் எஹூத் ஓல்மர்ட் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அமைச்சர் கொண்டலிஸா ரைஸ், இஸ்ரேல் – லெபனானுக்கிடையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவது தொடர்பாக இஸ்ரேல் பிரதமரிடம் பேச்சு நடத்தி நாடு திரும்பியதன் பின்னரே மேற்கண்டவாறு இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும், லெபனானுக்கும் இடையில் யுத்த நிறுத்தமொன்றை ஏற்படுத்துமாறு பல்வேறு நாடுகள் கோரி வருகின்றன. போப் 16ஆம் பெனடிக்கும் யுத்த நிறுத்தம் அவசியம் எனத் தெரிவித்திருந்தார்.

ஆனால், யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்பட்டதாகவோ – ஏற் படுமெனவோ எவ்வித அறிகுறிகளும் அங்கு காணப்படவில்லை.

இதுதொடர்பாக அவர் கூறியதாவது:-

ஹிஸ்புல்லாப் போராளிகள் மீதான தாக்குதல்கள் தொடரும். யுத்த நிறுத்தத்துக்கான வாய்ப்புக் குறைவே.

எமது இராணுவ வீரர்கள் இருவரை எப்போது விடுவிக்கிறார்களோ அப்போது தான் எமது தாக்குதல்கள் ஓயும்.

**விமானத் தாக்குதல்கள் 48 மணி நேரம் நிறுத்தம்**

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச் சர் கொண்டாலிஸா ரைஸின் வேண்டுகோளுக் கிணங்கவே நாங்கள் எமது விமானத் தாக்குதல்களை 48 மணிநேரம் நிறுத்தி வைத்தோம்.

ஆனால், எமது தரைப்படை மற்றும் கடற்படையின் தாக்குதல்கள் தொடரும் – என்றார்.இஸ்ரேல் விமானத் தாக்குதல்களை நிறுத்தியிருந்த நிலையில் ஹிஸ்புல்லாப் போராளிகள் இஸ்ரேல் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்தனர் என்றும் –

இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் தாக்குதலைத் தொடர்ந்தது என்றும் தெரியவருகிறது.

## ஆயுதக் கள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெருமளவு ஆயுதங்கள் வெடித்துச் சிதறி நாசமடைந்தன என்று கூறப்பட்டது. இந்த வெடிப்புச் சம்பவம் தற்செயலான விபத்தா அல்லது நாசகார வேலையா என்பதைக் கண்டறிவதற்கான விசாரணைகள் முடுக்கிவிடப் பட்டிருக்கின்றன என்று படைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

''ஆயுதக்களஞ்சியத்தில் வெடிப்பு ஏற்பட்டு தீ பரவியது உண்மைதான். எனினும், அதனை பொலிஸாரும் தீயணைப்புப் படையினரும் ஒருமணி நேரத்திற்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டனர்'' - என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க நேற்று 'உதயன்'இற்குத் தெரிவித்தார்.

''அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெருந்தொகையான தோட்டாக்களே வெடித்துச்சிதறின. அவற்றோடு சிறிய ரக ஆயுதங்கள் சிலவும் தீயில் எரிந்தன அவ்வளவுதான்'' - என்றார் சமரசிங்க. (க)

## கடற்படைத்தள....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசர அவசரமாக நடத்தப்பட்ட இந்தப் பேச்சுகளில் இடம்பெற்ற மேலதிக விவரங்கள் எவையும் தெரியவராத போதிலும் -

இந்திய எரிபொருள் கம்பனிகள் திருகோணமலை எண்ணெய்க் குதங்களைப் பாவித்துவருவதையும் அவற்றின் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்தினைப் பாவிப்பதனையும் சுட்டிக்காட்டி திருமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பு இந்திய நலனுக்கு இன்றியமையாதது என்றவகையில் இந்தப் பேச்சுகள் அமைந்தன என ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்தியப் பிரதமருடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக்கொண்ட அவசர தொலைபேசி அழைப்பானது திருமலை கடற்படைத் தளத்தின்மீது புலிகள் நடத்திய தாக்குதலின் பாதிப்பை எடுத்தியம்புவதாகவும் -

இந்தியாவின் உதவியை எதிர்பார்க்கும் நிலையிலேயே ஸ்ரீலங்காப் படைகள் உள்ளன என்பதை எடுத்துக்கூறுவதாகவுமே அமைந்தது என்றும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. (எ)

## படை நகர்வு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் உட்பட 12 இராணுவத்தினர் கொல்லப் பட்டுள்ளனர். 13 இராணுவச் சிப்பாய்கள் காயமுற்றுள்ளனர். இத்தாக்குதலில் 40 க்கும் அதிகமான புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் சிலரது சடலங்களைப் புலிகள் தம்மோடு எடுத்துச் சென்றுள்ளனர். மேலும், பல புலி உறுப்பினர்களின் சடலங்கள் மாவிலாறு அணைக்கட்டுப் பகுதியில் கிடக்கின்றன.''

- என்றும் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

கதிரவெளியில் உள்ள கடற்புலிகளின் தளமும் விமானக் குண்டு வீச்சால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. விமானப் படையினரின் ஆதரவுடன் மாவிலாறு கால்வாய் அணையைத் திறப்பதற்கான 'மிஷன் வோட்டர் செட்' நடவடிக்கை வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றது எனவும் பிரிகேடியர் தெரிவித்தார்.

தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் பெரும் எடுப்பில் முன்னேற முயன்ற அரசுப் படைகளைத் தாங்கள் பதிலடி கொடுத்துப் பின்வாங்கச் செய்திருக்கிறார்கள் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இரண்டு அதிகாரிகள் உட்பட 15 படையினர் இந்த முடியடிப்புச் சமரில் உயிரிழந்தனர் என்றும், பெரும் எண்ணிக்கையான படையினர் படுகாயங்களுக்குள்ளாகி இருக் கின்றனர் எனவும் புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

நேற்றைய தினமும் அந்தப் பிரதேசத்தில் படையினரின் நகர்வு முயற்சிகள் இடம்பெற்றன. எனினும், பெரும் எடுப்பிலான தாக்குதல் முயற்சிகள் இருக்கவில்லை என்று தகவல்கள் தெரிவித்தன.

படை நகர்வு மந்தமாக இருந்த போதிலும் வான் வழித் தாக்குதல்கள் உக்கிரமாக மேற்கொள்ளப்பட்டன என்றும் தெரிகிறது. (ஐ)

# திருமலைக் கடற்தளம் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, கடற் பரப்பில் கடற் புலிகளின் ஐந்து படகு களால் வழிமறிக்கப்பட்ட 'டோறா' பீரங்கிப் படகு ஒன்று தாக்குதலில் மூழ்கடிக்கப்பட்டது என்றும் தெரிகிறது. டோறா மூழ்கடிக்கப்பட்டபோது அதில் இருந்த எட்டுப் படையினரும் உயிரிழந்தனர் எனவும் கூறப்படுகிறது.

துருப்பினரை ஏற்றிவந்த கப்பல் கடற்புலிகளின் தாக்குத லில் இருந்து தப்பி சர்வதேச கடற்பரப்புக்குள் சென்றதாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. அந்தக் கப்பல் பிற்பகல் அளவில் பாதுகாப்பாக துறைமுகப்பகுதியை வந்தடைந்துவிட்டது என்று அரச பாதுகாப்பு வட்டாரம் தகவல் தெரிவித்தது.

நேற்றுப் பகல் முழுவதும் இப்படியாக ஒன்றுக்கொன்று முரண்பட்ட தகவல்கள் வந்து கொண்டிருக்க, நேற்று மாலை 6.30 மணியளவில் குறித்த கப்பல் மீண்டும் திருமலை நோக்கி திரும்பி வந்திருக்கின்றது. அப்போது புலிகள் புல்மோட்டை கடற்பரப்பில் அதனை வழிமறித்து சுற்றி வளைத்துத் தாக்கினர் என்று இணையத்தளத் தகவல்கள் நேற்றிரவு தெரிவித்தன. திரு கோணமலையிலிருந்து வடகிழக்காக 49 கடல் மைல்தொலைவில் புல்மோட்டைக்கும் புட வைக்கட்டு என்ற பகுதிக்கும் இடையிலான கடற்பரப்பில் புலிகள் வழிமறித்துத் தாக்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக துருப்புக் கப்பலுக்குப்பாதுகாப்பாக கடற்படையின் டோறா முதலிய கடற்கலங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து கடற்புலிகளோடு தாக்குதலில் ஈடுபட்டன. விமானப்படையின் கிபிர் விமானங்களும் குறித்த கடற்பரப்புக்கு மேலாகப் பறந்து கடற்புலிகளின் படகுகளை இலக்கு வைத்து குண்டுகளை வீசின என்றும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் துருப்பினருடன் வந்த கப்பல் கரைசேர்ந்துவிட்டது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

**புலிகளின் ஷெல் மழை**

நேற்றுப் பிற்பகல் சுமார் 2.00 மணியளவில் கடற்படைத் தளம் மீது ஷெல்கள் அடுத்தடுத்து வீழ்ந்து பெரும் சத்தத்துடன் வெடித்தன. உடனடியாகக் கடற்படைத் தளப் பிரதேசத்தைப் புகை மண்டலம் சூழ்ந்து கொண்டது. கப்பல் துறைப் பகுதி மீதே பல ஷெல்கள் வீழ்ந்து சேதத்தை ஏற்படுத்தின. உடனடியாக கடற்படையினர் உஷார்படுத்தப்பட்டனர். பாதுகாப்பான இடங் களில் ஒளிந்து கொள்ளுமாறு சகலருக்கும் உத்தரவிடப்பட்டது.

கடற்படைத் தளத்தினுள் ஷெல்கள் வீழ்ந்த போது எழுந்த பெரும் வெடி ஓசைகள் அந்தப் பிரதேசத்தை அதிர வைத்தன.

கடற்படைத் தளத்தினுள் அமைந்திருந்த எரிபொருள் களஞ்சியக் குதம் ஒன்றையும் ஷெல் தாக்கியது. அதனால், அது தீப்பற்றி பெரும் புகை மண்டலத்துடன் எரிந்தது.

பெரும் வெடி ஓசைகளை அடுத்து கடற்படைத் தளத்தில் இருந்து எழுந்த புகை மண்டலத்தைக் கண்ட அப்பிரதேச மக்கள் கிலி கொண்டனர்.

பெரும் வெடி அதிர்வுகள் திருமலை நகரப் பகுதியையும் உலுக்கின. அங்கு பதற்றமும், பரபரப்பும் ஏற்பட்டது. வீதிகளில் காணப்பட்ட மக்கள் விழுந்தடித்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர். கடைகள், அலுவலகங்கள் இழுத்து மூடப்பட்டன. நகரும் பெரும் அல்லோலகல்லோலப்பட்டு அடங்கி வெறிச்சோடியது.

கடற்படைத்தளத்தை அண்டி குடியிருந்த கடற்படையினரின் குடும்பங்கள் அவசர அவசரமாக அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டன.

புலிகள் ஏவிய ஷெல்களில் ஒன்று கடற்படைத் தளத்தினுள் அமைந்திருந்த கடற்படையினரின் தலைமையகத்தையும் தாக்கியது. இதனால், அங்கும் சேதங்கள் ஏற்பட்டன. நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று கடற்படைத் தலைமையகப் பகுதியில் தரையிறங்கிச் சென்றது என்றும் கூறப்பட்டது.

காயமடைந்தவர்கள் ஹெலிக்கொப்டர் மூலம் சிகிச்சைக்காக ஏற்றிச் செல்லப்பட்டிருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

திருமலை கடற்படைத் தளத்தின் உள்ளே புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்தி இருப்பது இதுவே முதல் முறை ஆகும்.

**நகரில் சோதனைகள் தீவிரம்**

கடற்படைத் தளம் மீது நடத்தப் பட்ட இந்த அகோர ஷெல் தாக்குதலை அடுத்து திருமலை நகரப் பகுதி முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. வீதிகள் எங்கும் படை யினர் குவிக்கப்பட்டு முழத்துக்கு முழம் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

கடற்படைத் தளத்துக்கு அண்மையில் வசிக்கும் குடும்பங் கள் அந்தப் பிர தேசத்தை விட்டு வெளியேறி விடுமாறு கடற்படையினரால் பணிக்கப் பட்டுள்ளனர் என்று தெரிவிக் கப்பட்டது.

**சம்பூர் மீது பதிலடி**

கடற்படைத்தளம் மீது புலிகள் மேற்கொண்ட த்தாக்குதலுக்குப் பதிலடியாக விமானப்படையினர் உடனடியாகவே சம்பூர் பிரதேசம் மீது பதிலடி தொடுத்தனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சம்பூர் பிரதேசம் மீது இஸ்ரேலியத் தயாரிப்பான 'கிபிர்' விமானங்கள் குண்டுத் தாக்குதல் நடத்தின என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

திருமலை பிளான்டின் பொயின்ற், மங்கி பிறிட்ஜ் ஆகிய படைமுகாம்களில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர் கிழக்குப் பிரதேசம் மீது கடும் ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

பெரும் எடுப்பில் நடத்தப்பட்ட வான் தாக்குதல் மற்றும் ஷெல் வீச்சுகளால் புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களில் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரம் உடனடியாகத் தெரியவரவில்லை. (எ-க-1)

## கதிரிப்பாயில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இளைஞரின் சடலம், அவர் பயணம் செய்ததாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிளின் அருகில் காணப்பட்டது.

உயிரிழந்த இளைஞரின்சடலத்தில் காணப் பட்ட அடையாள அட்டையில் சன்னாசி ரவிச் சந்திரன் (நிரந்தர வதிவிடம்: ஆலியெலை - பதுளை, தற்காலிக வதிவிடம்: பொன்னப்பா லேன், ஓட்டுமடம் யாழ்ப்பாணம்) எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

சம்பவ இடத்திற்குச் சென்ற மல்லாகம் மாவட்ட நீதிவான் திரு மதி சறோஜினி இளங்கோவன் விசாரணை நடத்தியதுடன், தற்போது அச்சுவேலி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள இளைஞரின் சடலத்தை, பிரேத பரிசோதனை களுக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ-1-11)


Diploma in Computerized Accounting With Manual Accounting
#MYOB #Quick Book Pro #Accpack #Tally
MCS
05.08.2006 வரை 80% சலுகை
Supported By UNDP/JRRP மேலதிக விபரங்களுக்கு நேரில் 324, Palaly Road, Jaffna.


## மரண அறிவித்தல்

### திருமதி பேரம்பலம் புஷ்பமணி

அனலைதீவு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி பேரம்பலம் புஷ்பமணி நேற்று (01.08.2006) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியநாதி - பார்வதி தம்பதியரின் அன்பு மகளும் வேலாயுதம் பேரம்பலத்தின் அன்பு மனைவியும் தவநாயகி(பிறப்பு, இறப்புப் பதிவாளர் - அனலைதீவு), கௌசலா (கனடா), கலாநிதி (கனடா), கேதீஸ்வரன், சிறிகாந்தன் (கனடா),குகநேசர்ஆகியோரின் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2006) புதன் கிழமை முற்பகல்11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*6 ஆம் வட்டாரம், அனலைதீவு.*

தகவல்: பே.குகநேசர் (மகன்).


IDM Computer Studies island wide (PVT) ltd HND (U.K.)
கற்கை நெறிகள் விவரங்களுக்கு 4 ஆம் பக்கம் பார்க்க


## மரண அறிவித்தல்கள்

### கனகசபை முருகேசு



(ராணி ஆபரண மாளிகை)

பருத்தித்துறை கிழக்கைச் சேர்ந்த கனகசபை முருகேசு 01.08.2006 மாலை காலமாகி விட்டார். அன்னாரின் தகனக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*152, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்: மு.சோதிலிங்கம்(மகன்).

### திருமதி மகேந்திரன் மேரிகில்டா



இல.10/1, றக்கா வீதி, சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேந்திரன் மேரிகில்டா (கிளி) 31.07.2006 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தம்பிராசா மகேந்திரனின் அன்பு மனைவியும் தம்பித்துரை-தங்கமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பிராசா தேவமாணிக்கத்தின் மருமகளும் கசில்டா ராகினி, ரமேஸ் கஜேந்திரன் (I.C.R.C) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரான்லி கொன்ஸ்ரன்ரைன், ஸ்ரீபாமா (ஆசிரியை, புனித சாள்ஸ் ம.வி.) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரித்தன், அஸ்வின் ஆகியோரின் பெரியதாயும் சுமாலிக்கா, வருணியா (புனித ஜோண் பொஸ்கோ ம.வி.) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.08.2006) புதன் கிழமை 10/1, றக்கா வீதியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகி, பரியோவான் அங்கிலிக்கன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.10/1, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.** (52870)

தகவல்: தம்பிராசா மகேந்திரன் (கணவர்).

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நி[illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.08.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org